சந்நிதிப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தலில்
சமயவளர்ச்சி கருதி இவ்வெளியீட்டிதழ் உதயமாகியது




தொண்டைமானாறு
ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின்

# அற்புதங்களும் அனுக்கிரகங்களும்

2011

- மூன்றாவது வெளியீடு -

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| புத்திரபாக்கியமும் மணிமண்டபமும்... | - சிவஸ்ரீ சி. செல்வமணிஐயர் | 03 |
| முடமாகியவரை நடக்கவைத்த சந்நிதி முருகன் | - கோ. குணபாலன் | 04 |
| மணவாழ்வு தந்த வள்ளிமணாளன் | - சி.சிவாஜினி | 07 |
| கேட்டவரம் தந்த சக்தியும், சந்நிதி வேலனும் | - சி. தீபானந் | 08 |
| தளர்வறியா மனம்தந்த சந்நிதி முருகன் | - திருமதி ஜெயவதனா | 09 |
| உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன் | - Dr. P. சிவபாலன் | 11 |
| 2010 வெளியீட்டினால் நிகழ்த்தப்பெற்ற சாதனை | - சி.சிவகுமாரன் | 14 |
| சந்நிதியானின் புகழ் | - லண்டனிலிருந்து N. சுதாகரன் | 15 |
| சரியைத்தொண்டு புரிந்ததனால் கிடைத்த பலன் | Mrs. கங்கா அமலன் (UK) | 16 |
| சந்நிதியான் ஆச்சிரமம் பன்முகப் பணிகள் | -வல்வையூர் அப்பாண்ணா | 17 |
| சந்நிதி செல்லுவோம் (பாடல்) | - ஸ்ரீவாணி | 23 |
| நீதிமன்றத்திற்கு வந்த சந்நிதி முருகன் | - சி.சிவகுமாரன் | 25 |
| பக்கத்துணை நின்று காத்தவன் | - பொன்னர் வல்லிபுரம் | 28 |



*எழுத்தாளர், தொகுப்பாளர்* :- சி. சிவகுமாரன், Mobile No. 0778285599
*கணனி வடிவமைப்பு* :- ஸ்ரீவாணி வெளியீட்டகம், வல்வெட்டி.
*அச்சுப்பதிப்பு, புத்தகமாக்கல்* :- New S.P.M. பதிப்பகம், பருத்தித்துறை.
*அச்சிட்ட பிரதிகள்* :- எட்டாயிரம் (8000)


**அன்புநிறைந்த முருகனடியார்களே!**

எங்கள் சமயவளர்ச்சி கருதி அடியேன் கடந்த ஏழு வருடங்களாக வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் இரதோற்சவத்தில் இறை அற்புதங்கள் அடங்கிய புத்தகத்தினை அடியார்களுக்கு இலவசமாகவே விநியோகித்து வருகின்றேன்.

ஆனால், சந்நிதியில் அடியவர் தொகை மிக அதிகமாகையினால், புத்தக விநியோகநேரத்தில் ஒழுங்குநிலை பேணுவதற்காகவும், பல பெரியவர்களின் ஆலோசனைப்படியும், 25/-முடிவுவிலையாகவுள்ள இந்நூலினை அன்பளிப்புப்பணம் 10 ரூபாவாக 2010ம் ஆண்டிலிருந்து விநியோகிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதனால் கிடைக்கப்பெறும் பணத்தினையும் இப்பணிக்குப் பயன்படுத்தப் பெறுகின்றது.

- (ஆ-ர்)



ஸ்ரீ செல்வச்சந்நிதி
வள்ளி தேவசேனா சமேத சிங்காரவேலனின்
2011ம் ஆண்டு மகோற்சவ பிரதமகுரு
**சிவஸ்ரீ சி. செல்வமணி ஐயர் அவர்களின்**

## ஆசியுரை

***"சந்நிதி"*** என்ற சொல் பொதுவாக இறைவன் இருக்கும் கோயிலைக் குறிப்பதற்குப் பயன்பட்டாலும், இங்கு சந்நிதியே கோயிலாக உருவாகியுள்ளமை செல்வச் சந்நிதி ஆலயத்தின் தனித்துவமாகும்.

உலகெங்கிலுமுள்ள சைவமக்கள் மட்டுமல்லாது மற்றைய சமயத்தவர்கள்கூட செல்வச் சந்நிதி முருகனை, இறைவன் என்ற ஸ்தானத்தில் மட்டுமல்லாது, தங்கள் செல்வப் புதல்வனாக, தந்தையாக, குருவாக பாவனை செய்து உறவுபூண்டு - அன்புபாராட்டி மிக நெருக்கமாக வந்து வணங்குவதை நேரடியாகக் காணுகின்றோம்.

இன்றைய யுத்தமற்ற சாதாரண சூழ்நிலையில் வெளிநாடுகளில் இருந்துவரும் பெருந்தொகையான மக்கள், மற்றும் சிங்கள மக்கள்கூட சந்நிதியானிடம் அன்புகூர்ந்து வந்து வேண்டுதல் செய்கின்றார்கள்.

விபூதிப் பிரசாதங்கள் மட்டுமல்லாது ஆலயச் சுற்றாடலிலுள்ள மண்ணைக்கூட சிறு பைகளில் எடுத்துச் செல்கிறார்கள். யோகர் சுவாமிகள் வியந்ததுபோல் சந்நிதி மண்ணில்கூட எம்பெருமான் அருள் பிரகாசிக்கின்றது.

இத்துணை பேரருட் சக்திவாய்ந்த எங்கள் முருகனின் ரதோற்சவத்தன்று முருகனடியவர் திரு. சி. சிவகுமாரன் அவர்களால் சந்நிதியானின் திருவுளச் சம்மதத்துடன், எல்லோருக்கும் இந்நூல் கிடைக்கவேண்டும் என்ற ஆதங்கத்துடன் கூடுதலான பிரதிகளை அச்சிடுவித்து வெளியிட்டுவரும் திரு. சி. சிவகுமாரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.


எல்லாச் செல்வங்களும் அள்ளித்தரும் வேலவன் அவருக்கும் அனைத்து வளங்களும் கிடைக்கும்படி செய்யவேண்டும் என முருகனை வேண்டிநிற்கின்றேன்.

***"எந்நிதியும் தருவான் செல்வச் சந்நிதியான்"***

***- சிவஸ்ரீ சி. செல்வமணி ஐயர்***

உ

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



தொண்டைமானாறு ஆற்றங்கரை தனிலே அமர்ந்திருந்து இலட்சோபலட்சம் அடியார்களுக்கு அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீ செல்வச் சந்நிதி வேலவனின் “அற்புதங்களும் அனுக்கிரகங்களும்” என்ற அருமையான நூல் 2009ம் ஆண்டில் முருகப் பெருமானின் வழிப்படுத்தலுடன், திரு. சி. சிவகுமார் அவர்களால் வெளியிடப்பட்டது.

முருகப்பெருமானின் அற்புதங்கள் பலவற்றை அறிந்த, அறியாத சைவசமய அன்பர்களுக்கும் ஏனையோர்க்கும் பக்தி மேலோங்கி, வாழ்வினை நெறிப்படுத்தும் அரிய நூலாக அமைந்ததால், அமோக வரவேற்பினைப் பெற்றுக்கொண்டது.

இன்று அந்நூலின் மூன்றாவது தொடர் புதிய பல அற்புதங்களுடன் வெளியிடப்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைவதுடன், வேலவனின் ஆசியுடன் இம்முயற்சி பல்லாண்டுகள் தொடர வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

அன்னதானக்கந்தன், ஆற்றங்கரை வேலவன், சந்நிதி முருகன், கல்லோடைக்கந்தன் என பலபெயர்கள் சூட்டி எம்மக்களால் அழைக்கும் அன்புக் கடவுள் முருகப்பெருமானின் அருளும், அன்பும், அரவணைப்பும் அனைத்து ஜீவராசிகளுக்கும் கிடைத்து எம்மக்கள் வாழ்வாங்கு வாழ முருகப்பெருமானையே வேண்டி அமைகின்றேன்.

**இ. வரதீஸ்வரன்**
பிரதேச செயலர்
பருத்தித்துறை.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வேன் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவ எண்குண பஞ்சரனே.

# புத்திர பாக்கியமும், மணிமண்டபமும் தந்தருளிய பூவரசமரத்தடியான்

– சிவஸ்ரீ சிவானந்தஐயர் செல்வமணி ஐயர் –

செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் பூசகர்களில் ஒருவராகிய எனக்கு முருகப்பெருமான் தந்தருளிய அற்புதங்களும் அனுக்கிரகங்களும் பல. இச் சிறு நூலின் பெறுமதி, மகிமைகருதி அடியேன் அடைந்துகொண்ட அற்புதங்களில் இரண்டை மட்டும் அடியார்களுக்கு சொல்லவிரும்புகின்றேன்.

அடியேனுக்கு திருமணமாகி ஆண்டுகள் பத்து கடந்துவிட்ட போதும் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை. இந்தக் கவலை நிறைந்த மனத்துடனும் முருகனுக்கு நிறைவாகப் பூசைகள் ஆற்றிவந்தேன். எனக்குப் பிறகும் இப் பூசைப் பணியினைத் தொடர ஒரு வாரிசைத் தந்தருள வேண்டுமென தீபாரார்தனை காண்பிக்கும் ஒவ்வொரு வேளையும் நெஞ்சுருகி வேண்டிக் கொண்டேன். தீபாராதனை காட்டும் வேளையில், எனது இடதுகையில் உள்ள சிறு மணி எழுப்பும் ஓசையுடன் சேர்ந்து எனதுள்ளமும் உருகியுருகி வேண்டியதன் பலனாக ஒரு ஆண்மகவையும், ஒரு பெண் பிள்ளையையும் வேற்பெருமான் தந்தருளினார்.

அன்னதானக் கந்தனின் திடீர் உத்தரவுக்கமைய மிக மிகக் குறுகிய காலத்தில் எனது வீட்டின் முற்பகுதியிலேயே "வள்ளி தெய்வானை மணிமண்டபம்" எனப் பெயர்கொண்ட மடம் அமைத்து அன்னப்பணி ஆற்றி வருகின்றேன். இந்த மடத்தினை அமைக்கும் செயலானது திட்டமிட்டிருந்தோ, எதிர்பார்த்திருந்தோ நடக்கவில்லை.

சென்றவருடம் வருடம் (2010) தைப்பூசத்திலன்று திறப்புவிழா நடைபெற்று, அன்னப்பணி ஆரம்பமானது. கடந்த வருட திருவிழா வேளை தினமும் இப்பணியைச் செய்வதற்குத் தீர்க்கமாகவிருந்தும் தொடர்ந்து செய்ய முடியாதளவிற்கு பொருளாதார நிலை நெருக்கடியாகவிருந்தது. இவ் அன்னப்பணியைத் தொடரவிரும்பி மனஉறுதியுடன் யாழ்ப்பாணம் சென்று அறிமுகமான பல அன்பர்களை அணுகியும் உதவிகள் சிறப்பாகக் கிடைக்காமையால் மனவேதனையோடு அந்திப்பொழுதில் வீட்டுக்குத் திரும்பினேன்.

மடத்து வாசலுக்கு வந்தபோது ஒரு மூடை அரிசி இருப்பதைக் கண்டு உள்ளே மறுநாளுக்குரிய அன்னப்பணி ஆயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை வினாவியபோதும், ஒருவருக்கும் யார் இதனை வைத்தார்கள்? என்பது தெரியவில்லை. அந்த அரிசிமூடை கிடைத்த நாள்முதல் அன்னப்பணியினைச் சிறப்பாகச் செய்வதற்கான ஒழுங்குகள் சுலபமாக அமைந்துகொண்டிருப்பது முருகனின் பேரருளே காரணமாக இருக்கின்றது.

– சிவஸ்ரீ சி. செல்வமணி ஐயர்
T.P. 0213205724

## 2011ம் ஆண்டு ஸ்ரீ செல்வச் சந்நிதியில் நிகழ்ந்த அற்புதம்



# முடமாகியவரை முழுமையாக நடக்க வைத்த ஸ்ரீ செல்வச் சன்னிதி முருகையன்

இப்புத்தகப் பதிப்பாளர் தீபன் அவர்களின் ஆலோசனைப்படி, அடியேனும் தீபனும் 29-07-2011 அன்று சந்நிதிக்குச் சென்றோம். முருகனின் அனுக்கிரகத்தால் முழுப்பலனடைந்த அவ்வன்பரை தீபன் தேடிக்கொணடிருந்த நேரத்தில், அடியேன் முருகனைக் கேட்டேன் "அவ்வன்பரின் அற்புதம் பற்றிய ஒரு வாக்குத் தா முருகா" என்று. "என்னடியவன் முதல் அடியெடுத்து நடக்கத் தொடங்கிய முதல்நாள் அவனுக்கு ஒரு பூமாலை அணிவித்து, என் முதுகில் தூக்கி நடந்தேன்" என்று திருவாய் மலர்ந்ததுடன், இவ்வளவு சம்பவத்தையும் காட்சிப்படுத்தியும் காட்டியருளினார் முருகப்பெருமான்.

சிறுபிள்ளையின் கைகளைக் கழுத்திலே கொழுவி முதுகிலே சுமப்பதை "உப்புக்காவுவது" என்று சொல்லுவார்கள். இதே உப்புக்காவு வது போன்ற தன்மையான நிலையில், அவ்வன்பரைச் சுமந்து நடந்து காட்டினார் எம்பெருமான்.

இவ்வன்பர் மட்டுமல்லாது எல்லாவிதமான அங்கக் குறைபாடுடையவர்களையும் சுகப்படுத்தலாமே என்றொரு கேள்வி அடியேன் மனதிலே எழுந்தபடியே முருகனைத் தியாணித்தேன். உடனே "**ஒரு தராசை சமநிலையில் பிடித்தபடியே காட்சிப்படுத்தினார் கந்தவேள**"

எவர் நீதிநெறி தவறாமல் மனச்சாட்சியின்படி வாழ்கிறாரோ, அவர் கிரகநிலைப்படியோ, தீவினைப்பயன்படியோ துன்பநிலை அடைந்தாலும், சந்நிதியானைச் சரணைடைந்தால் சில கால இடைவெளியில் நிட்சயம் எம்பெருமானது திருவருட் கடாட்சத்தினால் அற்புதப்பலனை அடைந்து கொள்வார் என்பதே முருகப்பெருமானது "தராசுக்காட்சி" உறுதிப் படுத்தியது.

தீபனுடன் அவ்வன்பரைச் சந்தித்தவுடன், "எல்லோரும் இறைவனுக்குத்தான் மாலைஅணிவிப்பார்கள். ஆனால் உங்களை நடக்க வைப்பதற்காக முருகனே உங்களுக்கு மாலைபோட்டு, தன்மீது உங்களைச் சுமந்து, நீங்கள் திரும்பவும் நடக்க அருள் பாலித்திருக்கிறரே. இது உண்மைதானா? நீங்கள் நடப்பதற்கு முதல்நாள் இச்சம்பவங்களை அனுபவித்தீர்களா?" என்று கேட்டேன்.

உண்மை உண்மையென பலதடவைகள் சொல்லித் தலையசைத் துக்கொண்டார். மடப்பள்ளி வாசலில் சில பக்தர்களுடன் இவற்றைச்

செவிமடுத்துக்கொண்டிருந்த சிவஸ்ரீ செல்வமணி ஐயர் அவர்கள் முருகனின் பிரசாதங்கள், அமுதுகளைக் கொண்டுவந்து தந்தபோது உள்ளம் பரவசமடைந்தது. *-இப்புத்தக ஆசரியர் சி. சிவகுமாரன*

**இனி அவ்வன்பர் சொன்னவற்றைக் காணலாம்:-**

எனது பெயர் கோபாலசிங்கம் குணபாலன். கோட் றோட், கொட்டடிப் பிள்ளையார் கோயிலடி, பருத்தித்துறையைச் சேர்ந்தனான். எனக்கு இப்போது 48 வயது. 40 வயது நடக்கும்போது கொலஸ்ரோல், காட்டற்ராக் வந்தவுடன் கால்கள் நடக்கும் சக்தியை இழந்து முடங்கிப்போனேன். மூன்று வருடங்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வார்ட்டில் தங்கியிருந்தேன். கடைசியில் சொன்னார்கள் - மூளையில் நீர் கசிகிறது. அதனால் கால்கள் இனிச் சரிவராது என்று. இதன்பின் பாதை மூடியிருந்த காலத்தில் தொண்டு நிறுவன உதவியுடன் கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்ந்து ஒரு வருடம் வைத்தியம் செய்தும் ஒரு பலனும் கிட்டவில்லை.

இத்துன்பங்களினால் குடும்பத்தினருக்குப் பாரமாக இருக்க விரும்பாது, சந்நிதியானே சரணமென, சந்நிதித் தலத்தில் ஒரேயடியாக தஞ்சமடைந்தேன். சந்நிதியான் ஆச்சிரமத்தினர் மூன்று சில்லுச் சைக்கிள் ஒன்றைத் தந்தார்கள். இதனுதவியுடன் ஓரளவு செயற்பட்டாலும், காலைக் கடன்களை ஆற்றுவது முதல் எனது அன்றாடக் கடமைகளைச் செய்வதில் மிகக் கஷ்டப்பட்டேன்.

காண்டாமணியோசை கேட்கும்போதும், பூசை நடக்கும் போதும் வேளைக்கு வேளை சந்நிதிக் கந்தனிடமே, கையில் பிச்சைப் பாத்திரத்துடன் நின்றுகொண்டு, ஒற்றை மரமானேன், தட்டந்தனியனானேன் முருகாவென உள்ளமுருகிவந்தேன்.

நான் அழுத கண்ணீர் வீண்போகவில்லை. சந்நிதியிலே பல காலமாகத் தங்கியிருந்து மணியடிக்கிற இராஜேஸ்வரி என்கிற பெண், ஒரு காலைப்பொழுது முருகனின் நூல் ஒன்றைக் கொண்டுவந்து எனது காலில் கட்டிவிட்டா. அன்றிரவே முன்சொன்ன முருகனின் காட்சிகளைக் கனாவில் கண்டதுடன், முருகன் சில தகவல்களையும் சொன்னார். "நாளையிலிருந்தே நீ வண்டியை விட்டெழுந்து நடக்கப் பழகு. எனது மூலஸ்தானத்தில் ஒளிவீசும் தீப எண்ணெய்யையும், தீர்த்தத்தையும் பெற்று கால்களில் தடவிக்கொள்" என்றார்.

உண்மையிலே அடுத்தநாளிலிருந்து ஒரு கைத்தடி உதவியுடன் மிக மிகக் கஷ்டப்பட்ட நிலையில் ஒவ்வோர் அடியாக காலெடுத்து வைத்தேன். தினம் தினம் எண்ணெய், திருநீறு, தீர்த்தம் இவைகளைப் பூசிவந்தேன்.

சில வாரங்களின் பின் கைத்தடி ஊன்றி சுலபமாக நடக்கத் தக்கதாக இருந்தாலும், கைத்தடி பிடிக்கும் ஒரு கை மட்டும் கடுமையாக

நடுங்கிப் பதறிக்கொள்ளும். இதனால் நடக்க நடக்க கைத்தடியே அங்கு மிங்குமாகப் பதறிக்கொண்டு திக்குமுக்காடிப்போவேன்.

திரும்பவும் சந்நிதிப் பெருமான் கனாவில் வந்து சொன்னார். "இனியுன்னால் தெளிவாக நடக்கமுடியும். பயத்தின் காரணமாக கைத் தடியையே பற்றிப் பிடித்திருக்கிறாய். என்னை நம்புவாயாக. கைத்தடியை வீசிக்கொள்" என்றார்.

ஐயன் சொன்னபடி கைத்தடியில்லாமல் நடக்கத்தொடங்கிய பின் உண்மையிலேயே நடுக்கம், பதறல் எல்லாம் நின்றுவிட்டது.

இதன்பின் சந்நிதியான் ஆச்சிரமத்தினர் தந்த மூன்று சில்லு சைக்கிள் வண்டியை நன்றியுடன் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன்.

முருகப்பன் தந்த பெருங்கருணையினால் கடந்த நான்கு மாதங் களாக நிறைந்த சந்தோஷத்தில் ஆலய சுற்றாடலெங்கும் ஓடி ஓடி நடந்து திரிகின்றேன். இப்படியிருக்கையில், முருகன் கட்டளையிட்டார் "தினமும் எனது ஆலய வீதியைக் கூட்டித் துப்பரவு செய்யென்றார்" இதன்பிரகாரம் ஒவ்வொரு நாளும் இப்பணியை அதிகாலையில் செய்து கொண்டே வருகின்றேன்.

இனி என் வாழ்க்கை இறுதிவரைக்கும் சந்நிதியிலே தங்கியிருப் பது என்று தீர்க்கமாகிவிட்டேன்.

இப்போதெல்லாம் சிலவேளை எனது ஊருக்குச் சென்றுவருவேன். ஞாயிற்றுக்கிழமைகளில் வல்லிபுரக் கோயிலுக்குச் சென்றுவருவேன்.

**எல்லாப்புகழும் சந்நிதியானுக்கே!**

இங்ஙனம் சந்நிதி முருகனின்
அன்புப் புதல்வன்
கோ-இளையபாலன்

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூர பயங் கரனே.

வடிவுந் தனமும் மனமும் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொரு பாவி வெளிப்படினே.

# மணவாழ்வு தந்த வள்ளி மணாளன்

- சி. சிவாஜினி -

அந்தணத்திடல், சரசாலையைச் சேர்ந்த நாங்கள் முன்னைய யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மொட்டைப்புலியடி, உடுப்பிட்டியில் வசித்து வருகின்றோம். உடுப்பிட்டியில் வசிக்கத் தொடங்கிய பின் எனது தாயார் பிரதி செவ்வாய், வெள்ளி தோறும் சன்னிதி முருகனிடம் சென்று வருவா. இப்படியாகச் சென்று வருகையில், தொடர்ந்து மூன்று வெள் ளிக்கிழமைகளில் அம்மா கோயிலுக்கு புறப்படும் வேளையில் ஒரு வயதான பெரியவர் எமது வீட்டு வாசலுக்கு வந்து பிச்சையிடும்படி கேட்டார். நாங்களும் பிச்சை வழங்கினோம். நான்காவது வெள்ளிக்கிழமை வந்த போது "ஏன் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வருகின்றீர்கள்" என்று கேட்ட போது, சற்று கடுந்தொணியில், "உமக்கு விருப்பம் இருந்தால் தாருங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றார். இதன்பின் அப்பெரியவர் வரவேயில்லை.

எமது வீட்டில் 2009, 2010ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சந்நிதி முருகனின் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற இரண்டு புத்தகங்கள் இருந்தன. அப்பெரியவர் வந்துசென்ற பின்தான் அப்புத்த கங்களை எடுத்து ஒருக்கால் வாசித்துப்பார்க்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. இவ்விரு புத்தகங்களைப் படித்தபோது முருகப் பெருமானின் அற்புதங்கள் என்னை மெய்சிலிர்க்கவைத்தன. இப்புத்தகத் தைப் படித்தபின்புதான், வேற்பெருமான்தான் எமது வீட்டுக்கு வயதான பெரியவராக வந்திருக்கவேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

இப்புத்தக வெளியீட்டிற்கு நானும் ஒரு பங்களிப்புச் செய்யவேண்டு மென விரும்பி, சென்ற சித்திரை மாதமளவில் சிவகுமார் ஐயாவிடம் சென்று என்னிடமுள்ள 3500 ரூபாவை வழங்கினேன். அப்போது அவர் கூறினார் "உங்களுடைய பங்களிப்புத்தான் இவ்வருட முருகனது புத்தகத் திற்கு முதற்பணமாகக் கிடைத்துள்ளது. உங்கள் வீட்டில் பல தடவைகள் தடைப்பட்டுவந்த ஒரு நற்காரியத்தை 45 நாட்களுக்குள் சந்நிதி முருகனே நிறேவேற்றித் தரப்போகின்றார்" என்று கூறினார்.

அதன்படி பல திருமணப் பேச்சுக்களிலும் தடைப்பட்டு வந்த எனது திருமணம் அவர்சொன்ன 45 நாட்களுக்குள் திடீரென முடிவாகியது. இதைச் சிவகுமார் ஐயாவிடம் சொன்னபோது, "நீங்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் சேமித்த பணத்தை தந்ததன் பலன்தான் " என்றார்.

உண்மையிலே கோழிமுட்டை வித்துச் சேகரித்த பணம்தான். இந்த அன்பிற்குள் விரைந்தருள்புரிந்த முருகப்பெருமான் கனடாவில் தொழில் புரியும் நற் குணமுள்ள துணைவனைத் தந்துள்ளார். எனது திருமண நிகழ்வை வேறு கோயில்களில் நடாத்த ஒழுங்குசெய்தபோது தடையேற்றபட்டது. சந்நிதித் தலத்தில்தான் திருமண நிகழ்வு 10-07-2011 அன்று இனிதே நிறைவேறியது.

# கேட்ட வரம் தந்த சக்தியும், சந்நிதி வேலனும்

**– நியூ S. P. M. அச்சக உரிமையாளர் தீபானந் –**

சென்ற வருடம் (2010) சந்நிதி முருகனின் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற மகிமைவாய்ந்த புத்தகங்களை எனது அச் சகத்தில் அச்சிட்டு நிறைவேற்றும் பணியை மேற்கொண்டதிலிருந்து, அற்புதப் பலன்களை எம்பெருமான் தொடர்ச்சியாக அருளுகின்றார். சென்ற வருடம் அப்புத்தகங்களை அச்சிட ஆரம்பிக்கும்போதே பெருமான் தந்த பலன்களை அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அடியேன் 2000 ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை பருத்தித்துறையில் கோட்டுவாசல் அம்மனென அழைக்கப்படும் சண்டிகா பரமேஸ்வரி ஆலய நிர்வாகஸ்தராகத் தொண்டாற்றி வருகின்றேன். இப்படி அன்னையின் பணிமட்டும் செய்துகொண்டிருக்கையில், அன்னையவள் 2007ம் ஆண்டு அச்சகத் தொழிலை நடாத்த அருள் பாலித்ததுடன், அவ்வாண்டே எனக்குத் திருமணமும் ஆனது. திருமணமாகி நான்கு ஆண்டுகள் குழந்தைச் செல்வம் இல்லாமல் கவலையடைந்திருந்தோம். ஆலயத் தொண்டிலும் விரக்தியடைந்திருந்து, 2011 மகோற்சவத்துடன் இத்தொண்டினை நிறுத்தி விடுவது என்ற நிலைக்கு மனவேதனை அடைந்திருந்தேன்.

சென்ற வருடப் புத்தகம் அச்சிடும்பணி நிறைவடைந்தவுடன், "இப் புத்தகப் பணிமூலம் தொடர்ச்சியாக வேலவனின் பல அருட்கொடைகளைப் பெறுவீர்களென" இப்புத்தக ஆசிரியர் அவர்கள் எம் கவலை தீர்க்க சந்நிதி வேலவனிடம் கேட்டு வாக்குத்தந்தார். அவர் உரைத்ததற்கிணங்க எங்கள் அம்மனுக்கு முன்பாக நெய் விளக்கு ஏற்றிவந்தோம். இவ்வருட சந்நிதி மகோற்சவத்திற்கு முன்பாகவே, எம்பெருமாட்டியின் சித்திரை மகோற்சவ காலத்தில் குழந்தைச் செல்வப் பேற்றுக்கும் ஆளாகிவிட்டோம்.

குழந்தைச் செல்வ வரத்துடன், எனது தொழிலில் மேலதிக நவீன அச்சுயந்திர சாதனங்களுடனான தொழில் விஸ்தீரணமும், மேலும் பருத் தித்துறை நகராட்சி மன்றத்தில் மக்களால் ஒரு பிரதிநிதியாகத் தெரிவு செய்யும் பலனையும் அடையப்பெற்றேன். இப்பேறுகளைப் பெற்ற மன நிறைவுடன் இவ்வருட (2011) சந்நிதியின் அற்புதப் புத்தகத்தை அச்சிடு வித்து ஒப்பேற்றும் பலனையும் முருகன் தந்துள்ளார்.

ஆத்தாளதும், முருகனதும் தொண்டின்மூலம் பல பெரியார்கள், நல்ல மனிதர்களுடன் பழகி, நற்பண்புகளை வளர்க்க வாய்ப்புக் கிடைத்தது. ஒவ்வொருவரும் தமது வாழ்வில் குறிப்பிட்ட நேரத்தைப் பொதுத்தொண்டு, ஆன்மீகத் தொண்டிற்காக செலவழித்து எமது சமுதாய முன்னேற்றத்திற்கு செயற்படும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

– தீபானந்

# தளர்வறியா மனம் தந்த சந்நிதி முருகன்

## திருமதி ஜெயவதனா தங்கவடிவேலு

எனது சொந்த இடம் திருப்பூர் - மயிலிட்டி. எனது தந்தையார் பெயர் இராமநாதன். வயது 72. எமது குடும்பம்பத்தினர் பரம்பரை பரம்பரையாக சந்நிதி முருகனின் திருவிழாக் காலங்களில் விரதமிருத்தல், நேர்த்திகள் நிறைவேற்றுதல் முதலாக முருகனிடம் மிகுந்த ஈடுபாடுடையவர்களாக இருந்துவருகின்றோம். 1990ம் ஆண்டு எனது தந்தையாருக்கு ஒரு கையும், ஒரு காலும் செயற்பாடுகளற்று, பாரிசவாத நோயால் அவதிப்பட்டார். சந்நிதியானிடமும், சத்யசாயி பாபாவிடமும் அதீத பக்தி கொண்டு உள்ளமுருகி வந்ததன் பயனாக பூரணசுகம் அடையப்பெற்றார்.

வழிவழித் தோன்றலாக சந்நிதி முருகனிடம் ஈடுபாடுடைய மரபிற்கிணங்க அடியவளாகிய நானும் சந்நிதி முருகனைத் தொடர்ந்து அன்புடன் வணங்கிவந்தேன். எனது பெற்றோர் வல்வெட்டித்துறை ஊறணியைச் சேர்ந்த தங்கவடிவேலு என்பவரை எனக்கு திருமணம் செய்துவைத்தனர். எனக்கு ஒரு சிறுமியும், ஒரு சிறுவனுமாக இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

2004ம் ஆண்டு சுனாமி அலை இயற்கைக் கொடூரம் நிகழ்ந்த போது எனது கணவனை இழந்துவிட்டேன். எனினும் நான் சந்நிதி முருகனிடம் உள்ள பெரும் நம்பிக்கையினால் உறுதிதளரவில்லை. யுத்தத்தினால் வீடு வாசல் இழப்பு, கணவன் இழப்பு, பொருளாதார நெருக்கடி, சொந்த வீடு இல்லை இப்பேர்ப்பட்ட துன்பநிலைகள் மத்தியிலும், எனக்கு தையல்வேலை தெரிந்திருந்தபடியால், இத்தொழிலைச் செய்தே எனது பிள்ளைகளை வளர்த்து வருகின்றேன்.

2007ம் ஆண்டளவில் கஷ்டப்பட்டவர்களுக்கான ஒரு கலந்துரையாடலுக்கு அழைப்பின்பேரில் நானும் சென்றேன். என்றுமே என்னிடமுள்ள சந்நிதியானின் திருநீற்றை எனது நெற்றியில் பட்டைநாமம்போல் அணிந்து சென்றேன். அக்கலந்துரையாடலில், என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத பல அபிப்பிராயங்கள் பரிமாறப்பட்டன. அதனை நான் மேலும் விபரிக்க விரும்பவில்லை.

பகவான் சத்யசாயிபாபா சொன்னதுபோல் எல்லா மதங்களையும் மதிக்கின்றேன். எல்லாக் கடவுளையும் வணங்குகின்றேன். ஆனால் என்ன கஷ்டத்துடன் வாழ்ந்தாலும் "பிறந்த சமயத்தையும், சந்நிதியானையும் விட்டுப் பிரியமாட்டேன்" அப்பனின் விபூதி எனது நெற்றியிலிருந்து மனவுறுதியைத் தந்துகொண்டிருந்தது.

சந்நிதியானிடம் அற்புதப்பலனடைந்த எனது தந்தையாரிடம் எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன். "சந்நிதிச் சுற்றாடலெங்கும் பார்த்தால் எத்தனை விதமான குறைபாடுடையோர், நோயாளர்கள் எவ்வளவு துன்பங்களுடன் முருகனை நம்பி, சந்நிதித் தலத்திலே வாழ்கிறார்கள். பூவரச

மரத்தடியில் எவ்வளவு மக்கள் மனவுறுதி தளராமல் பாடிப்பாடி முருகனிடம் அன்பு பூண்டுவிட்டார்கள். நான் மட்டும் வசதி வாய்ப்புக்களுக்காக என்னப்பன் முருகனை விட்டுப் பிரிவேனா?'' என்று எனது தந்தையிடமே கொட்டித் தீர்த்தேன்.

இதன்பின் 2009ம் ஆண்டு ''அற்புதங்களும் அனுக்கிரகங்களும்'' என்ற புத்தகம் கிடைக்கப்பெற்றேன். இதைப்படித்தபோது, மெய்சிலிர்த்து முருகன்பால் இன்னமும் ஈர்க்கப்பட்டேன்.

இதேபோல் 2010ம் ஆண்டும் புத்தகம் கிடைக்கப்பெற்றேன். இதைப் படித்தவுடன் என்னால் இருப்புக்கொள்ள முடியவில்லை. இப்புத்தகத்திற்கு நானும் ஒரு பங்களிப்புச் செய்யவேண்டுமென்ற ஆவலில் இப்புத்தகத் தாரைத் தேடித்திரிந்து சந்திக்கமுடியாத நிலையில் சந்நிதிச் சூழலி லுள்ள ஒருவரிடம் நான் கொண்டுசென்ற இரண்டாயிரம் ரூபாவை புத்தகத்தாரிடம் கொடுக்கும்படி ஒப்படைத்தேன்

இதன்பின் முருகனருளால் ஒரு தொண்டார்வலர் உதவியுடன் திக்கம் என்ற இடத்தில் சொந்த வீடு அமைத்து தற்போது நிறைவுறும் நிலையில், 07-08-2011 ஞாயிற்றுக்கிழமையன்று சிவகுமார் ஐயாவை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.
நான் முன்பு வழங்கிய பணம் சிவகுமார் ஐயாவிடம் கிடைக்காததையறிந்து, திரும்பவும் ஆயிரம் ரூபாவை அவரிடம் ஒப்படைத்தேன். அச்சந்தர்ப்பத்தில் அடியவளும் 2011 புத்தகத்திற்கு முருகன் தந்த பலனை ஒரு ஆக்கமாக வழங்கவேண்டுமென்ற மனஉந்துதலில் இவ்வாக்கத்தை வழங்கினேன்.

சென்ற வருடம் புத்தக விநியோக நேரத்தில், ஓர் அடியவர் சொல்லிய தகவல்:- யாழ்ப்பாணம் தீவுப்பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்திலுள்ள ஓர் அம்மாவைத் தவிர மற்றைய எல்லோரும் சந்நிதி ஆற்றில் நீராடினார்கள். அவ்வேளையில் ஒருவர், ''அம்மா! ஆற்றில் குளிக்க வேண்டுமென்ற பெருவிருப்புடன் இவ்வளவு தூரம் வந்துவிட்டு ஏன் குளிக்காமல் நிற்கின்றீர்கள்'' என்றார்.
''உந்த அழுக்குத் தண்ணீரில் நான் குளிக்கமாட்டேன்'' என்றார் வயதான அம்மா. இதன்பின் அந்த அம்மாவுக்கு குஷ்டரோகம் போன்ற நோய் தோன்றியது. பல இடங்களிலும் நீண்டகாலம் வைத்தியம் செய்தும் தணியவில்லை. நோய்த்தாக்கத்தால் வருந்தியபோது, முருகன் கனாவில் தோன்றிச் சொன்னார், மகளே! எண்ணுக்கணக்கற்ற என்னடியவர்கள் நீராடிப் பலனடையும் எனது தீர்த்தத்தை அழுக்குத் தண்ணீர் என்றாயே! ஒருதடவை இந்த அழுக்கு நீரில் நீராடிப்பாரேன், அதன் மகிமையை உணர்ந்துகொள்வாய்'' இதன்பின் சகிக்கமுடியாத நோய்த்தாக்கத்தில் அவதிப்பட்ட அந்த அம்மா முருகனின் ஆற்றில் நீராடினார். அடுத்த நாளிலிருந்தே அந்நோய் தணியத் தொடங்கி ஒருவாரத்தில் பூரண சுகமடைந்தார்.

*சந்நிதி முருகா!*

## "உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன் பின்னை ஒருவரை யான் பின் செல்லேன்"

Dr. P. Sivapalan M.B.B.S (Cey) MCCP (SL)
SANNATHI MEDICAL CENTRE,
No. 3, 59th Lane, Colombo-06 011-4010737

தமிழும் சைவமும் எனது கண்கள் போன்றவை. தமிழனாகவும், சைவனாகவும் யாழ்ப்பாணத்திலே பிறந்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். சந்நிதி முருகனை மிகுந்த நம்பிக்கையுடன் வழிபட்டு வருகிறேன். முருகனை வழிபடும் பக்தர்கள் நல்ல மனிதர்களாகவும் வாழவேண்டும். உண்மையையே பேசவேண்டும். மற்றையோர்களின் பொருள்களை எடுக்கக்கூடாது. நீதி நியாயத்துடன் எரிச்சல், பொறாமை இன்றி வாழவேண்டும். மக்களுக்கு தம்மாலான உதவிகளைத் தேவைப் படும் நேரங்களில் செய்யவேண்டும். "நான் என்றும் இப்படியாக வாழும் நிலையில் என்னை வைத்திரு" என்றெல்லாம் முருகனை வேண்டி வழி படுவேன். மனசாட்சிக்கு விரோதமாக நான் நடப்பதில்லை. அதிசயிக்கக் கூடிய வண்ணம் சில நிகழ்வுகள் எனது வாழ்வில் நடந்துள்ளன. அவை எமது சமயத்தின் பெருமையை வலியுறுத்துகின்றன. சந்நிதி முருகன் தன்னை நம்பி மனச்சாட்சியுடன் வாழும் தனது பக்தர்களைக் காப்பாற்றி, உதவிகளையும் தேவையான நேரங்களில் செய்வார் என்பதை, அந்நிகழ் வுகள் உறுதியாக அறிய வைத்தன. வாழ்க்கையிலும், வைத்தியத் தொழிலிலும் சந்நிதி முருகன் எனக்கு பக்கபலமாக இருக்கிறார்.

**அந்நிகழ்வுகளை இனிக் காணலாம்:-**

1. முன்னைய யுத்த காலத்தில் இராணுவம் அச்சுவேலி நோக்கி வர முயற்சிக்கிற காலத்தில் மக்கள் இரவில் அயலூர்களுக்குச் சென்று தங்குவார்கள். நானும் உரும்பிராயில் தங்கியிருந்து பகல் நேரங்களில் அச்சுவேலிக்கு வந்து வைத்தியம் செய்வேன். ஒருநாள் நான் வரும்போது, நிலாவரைக்கு சமீபத்தில் மக்கள் பயந்து மரங்களின் கீழ் பதுங்கிக் கொண்டிருந்தனர். ஆகாயத்தில் கெலிகொப்டர் சுடும் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. எனது காரை நிறுத்தி எங்கிருந்து சுடுகிறார்க ளென்று ஒருவரைக் கேட்டேன். அவர் பயத்துடன் ஓடுங்கோ ஐயா என்றார். நடக்கிறது நடக்கட்டும் என்று சந்நிதி முருகனையே நினைத்தபடி சென்றேன். புத்தூர் சுடலை வெளியில் சென்றுகொண்டிருக்கும் போது காரின் பின் கண்ணாடி அருகே துவக்குச் சன்னம் போகிறதாக காரின் பின் ஆசனத் திலிருந்த எனது உதவியாளர் சொன்னார். காரை நிறுத்தி முருகா என்று சொல்லிக்கொண்டு இறங்கினோம். ஆகாயத்தைப் பார்த்தேன். மேலே

கெலிகொப்டர் வீதிக்கு சமீபமாக வந்து திரும்பிப் போவதைக் கண்டேன். அன்று முருகன்தான் எங்களைக் காப்பாற்றினார்.

**2.** ஒருநாள் எனக்கு நல்ல காய்ச்சல். அச்சுவேலியில் வேறு வைத்தியர்கள் இல்லை. என்னை நம்பி அங்கு வரும் நோயாளர்களின் நலன்கருதி காய்ச்சலுடன் அச்சவேலி வைத்தியசாலைக்குப் புறப்பட்டேன். நடுவழியில் மக்கள் இல்லாத இடத்தில் காரின் ஒரு சில்லு காற்றுப் போய்விட்டது. எனக்கு ஒன்றும் செய்யமுடியாத பெலவீனம். "முருகா! என்னால் ஒன்றும் செய்யமுடியாதுள்ளது. எல்லாம் உன்பொறுப்பு" என சொல்லிக்கொண்டு காரைவிட்டு இறங்கினேன். ஆச்சரியத்தக்க வண்ணம் ஒருவர் வந்து என்ன பிரச்சனை என்று கேட்டார். பிரச்சனையைச் சொன்னவுடன், நீங்கள் காருக்குள் இருங்கோ எனச் சொல்லிவிட்டு அவர் தனியாகவே சில்லைக் கழற்றிவிட்டு, காருக்குள் இருந்த சில்லை எடுத்து மாற்றிவிட்டு போட்டு வாருங்கோ என்றார். முருகன்தான் அன்று எனக்கு உதவிசெய்தார் என்பதை இன்றும் நினைக்கின்றேன்.

3. இந்திய அமைதிப்படை அச்சுவேலிக்கு முன்னேறிவந்த காலத்தில் மக்கள் எல்லோரும் கோயில்களில் சென்று தங்கினோம். சிலநாட்களின்பின் கொமாண்டர் கோயிலுக்கு வந்து எனது வீட்டிலிருந்து வைத்தியம் செய்யும்படி சொன்னார். கொமாண்டரும், படையினரும் முன்னால் செல்ல நானும் எமது குடும்பத்தினரும் பின்னால் சென்றுகொண்டிருந்தோம். சடுதியாக ஒரு குறுக்கொழுங்கையில் புலி உறுப்பினர்கள் சிலர் ஆயுதங்களுடன் எமக்கு சமீபமாக வந்துவிட்டனர். அவ்வேளை முருகனையே நினைத்து உள்ளமுருகினேன். படையினரைத் தாக்க அவர்களுக்கு நல்ல வசதியான சந்தர்ப்பம். "படையினரைத் தாக்கினால் படையினர் எங்களைத்தான் சுடுவார்கள்" என்று நான் அவர்களுக்கு சொல்லி ஒன்றும் செய்யாது போகச்சொன்னேன். அப்படியான சந்தர்ப்பத்தை புலிகள் தவறவிட மாட்டார்கள். ஆனால் அன்று நான் சொன்னவுடன் கட்டுண்ட பாம்புபோல் ஒன்றும் செய்யாது அவர்கள் திரும்பிச் சென்றனர். அன்று எனது குடும்பம் தப்பியது முருகன்செயல் என்றே உறுதிகொண்டேன்.

4. இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் ஒருநாள் எனது அச்சுவேலி வைத்தியசாலையில் ஒருபெண் இரவு 12.30 மணியளவில் ஒரு பிள்ளையை பிரசவித்தார். ஒரு மணியளவில் அங்கு பணிபுரியும் தாதியர்கள் நஞ்சுக்கொடி இன்னும் வரவில்லை என்று எனக்கு அறிவித்தனர். நான் உடனே பிரசவ அறைக்குச் சென்றேன். நஞ்சுக்கொடியை கையால் எடுப்பதற்கு எத்தனித்தேன். இலகுவாக அதைச் செய்யும் அனுபவம் எனக்குண்டு. அன்று அது முடியவில்லை. ஏற்கனவே நேரம் பிந்திவிட்டது. மேலும் தாமதித்தால் அப்பெண்ணின் உயிருக்கு ஆபத்து. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்று முடிவெடுத்தேன். இரவு ஊரங்குச் சட்டம். பிரயாணக் கஷ்டம். அப்படி

யிருந்தும் யாழ்ப்பாணம் போகவேண்டுமென்பதைக் கூறினேன். செத்தாலும் அக்கட்டிலில் சாவேன். வரமுடியாதென்று அப்பெண் பிடிவாதம் செய்தார்.

இப்பெண்ணின் குடும்பத்தினர் சிறுவயது தொடக்கம் என்னிடம் மிகவும் நம்பிக்கைவைத்து வைத்தியம் செய்யும் குடும்பமாகையால், திரும்பவும் வற்புறுத்தி முயற்சிசெய்து பார்த்தேன். "நேரம் அதிகம் சென்றுவிட்டது. இரத்தப்பெருக்கு வரக்கூடும். பெரியாஸ்பத்திரிதான் தகுந்த இடம். நான் எனது காரில் கூட்டிச்சென்று, நானும் உடன்நின்று வேண்டியதைச் செய்யலாம்" என்றேன். இப்பெண்ணைச் சம்மதிக்கச் செய்ய முடியாத நிலையில் முருகாவென்று சொல்லிக்கொண்டு, கையுறையை போட்டு கையை வைத்தேன். நஞ்சுக்கொடி வந்தது. உடனே தேவையான சிகிச்சை முறைகளைச் செய்து இரத்தப்பெருக்கு ஏற்படாமல் முருகனருளால் அப்பெண் சுகமடைந்தா. முருகனின் அருளால் எல்லாம் நன்றாகவே நடந்தது.

**5.** வைத்தியத் தொழிலிலும் முருகனின் அருள் எனக்குப் பக்கபலமாக இருந்து வருவதை என்றுமே உணர்ந்துகொண்டிருக்கிறேன். முருகனை வணங்கித்தான் வைத்தியம் செய்வேன். யாழ்ப்பாணத்தில் செப்ரிசீமியா நோய் பரவியிருந்த காலத்தில், அந்நோயினால் மரணங்களும் ஏற்பட்டிருந்தன. எனது வைத்தியசாலையில் செப்ரிசீமியா நோயாளிகள் பலர் முருகனருளால் குணமடைந்தனர். பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் எனது வைத்தயசாலையில் குணமடைந்ததும் முருகன் செயலே. அவர்களில் முக்கியமாக ஒரு பாடசாலை அதிபர் பக்கவாத நோயுடன் எனது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். முருகனருளால் அவர் சொற்பகாலத்தில் பக்கவாதம் வந்த அடையாளமே இல்லாமல் குணமடைந்தார். அது முருகனின் அற்புதமே.

**6.** வைத்தியத் தொழில் செய்வதனால் குறித்த நேரத்திற்கு ஒரு இடத்திற்கும் செல்லமுடியாமல் போய்விடும். முருகனருளால் நான் சந்நிதி கோயிலுக்குப் போகும்நேரம் அர்ச்சனை செய்யும் நேரமாக அமைந்துவிடும். அர்ச்சனை செய்யக்கூடியதாகவிருக்கும். பிரசாதமும் கிடைக்கும். மருந்து எனக் கூறப்படும் அமுதும் கிடைக்கும். ஒருநாள் எனக்கு அமுது கிடைக்கவில்லை. அது எனது மனதை உறுத்தியது. அதை யோசித்த வண்ணம் வேதனையுடன் வெளிமண்டபத்திற்கு வந்தேன். என்ன ஆச்சரியம். ஒரு ஏழை வயோதிபர் ஆலமிலைகளிலுள்ள அமுதை என்னிடம் நீட்டினார். முருகனே நேரில் வந்து தருகிறார் என உணர்ந்து அதை வாங்கிச் சாப்பிட்டேன்.

- வைத்தியர் P. ***சிவபாலன்***

இறைவனை நேரில் கண்டு கதைத்து மகிழ்ந்த
ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறினார்.

**"உனது நெஞ்சிற்கு துரோகம் செய்யாதே!**
**மனச்சாட்சியின் படி நட, நிட்சமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்"**

# 2010 புத்தக வெளியீட்டினால் நிகழ்த்தப்பெற்ற சாதனையும், சமய வளர்ச்சியும்

2010ம் ஆண்டும், அற்புதங்கள் தாங்கிய புத்தக வெளியீட்டுப் பணியைச் செய்யவேண்டும் என்கின்ற முருகனின் கட்டளைக்கிணங்க, முருகனருளால் குறுகிய நாட்களில் புத்தகங்கள் தயார் செய்து அச்சிட்டு இரண்டாவது வெளியீடாக வெளியிட்டேன். முருகனின் கட்டளையை சிரமேற்கொண்டு அப்பணியைச் செய்ததனால், சந்நிதி முருகனின் அருளும், அற்புதங்களும் மேலும் ஒருபடி உலகெங்கிலும் வியாபகமாகியதுடன், பெரும் வரவேற்பும் பெற்றுவிட்டன. சமய வளர்ச்சிக்கான பெரியதொரு இறைசாதனையும் நிகழ்ந்தேறிவிட்டது. இப் புத்தகத்தின் மூலம், கடந்த ஏழு மாதங்கட்கு முன்பாக லண்டன் இல்பேட் என்ற இடத்தில் "சக்திவேல் ஆலயம்" (Shakthivel Temple) உதயமாகியது. இவ்வாலயம் வணங்கி, வழிபாடியற்றுவதற்குரிய ஆலயம் என்ற வரையறைக்கப்பால், வெள்ளையின மக்கள் உட்பட பெருந்தொகையான மக்களின் துன்பங்கள், நோய் பிணிகள் தீர்த்து அற்புதங்களை நிகழ்த்தும் ஆலயமாக வளர்ச்சிகண்டு வருவது சந்நிதி முருகனின் பேரருட் கடாட்சமேயாகும்.

இவ்வாலயத்தின் தோற்றமானது, மிகப்பெரும் துன்பத்தின் விளிம்பில் தத்தளித்த ஒரு குடும்பத்தினரைக் காப்பாற்றி, அற்புதத்தை நிகழ்த்துவதற்காக, லண்டனில் வசித்துவரும் நடேசபிள்ளை சுதாகரன் என்பவர் மூலம், அடியேனின் ஆலோசனையின் பேரில் திடீரென ஆரம்பிக்கப்பெற்றது. விக்கிரகங்கள் எதுவுமில்லாமல் ஒரு முருகனின் படத்தை மட்டும் வைப்பித்து, A.K.S. Property என்ற தொழில் நிறுவனத்திலுள்ள ஒரு அறையில் மட்டும் ஆரம்பிக்கப்பெற்றது. இன்று அவ்வாலயம் பெருந்தொகையான மக்களின் ஆதரவுடன், விக்கிரகப் பிரதிஷ்டை இடம்பெற்று வளர்ச்சி கண்டு வருகின்றது. இவற்றுக்குச் சான்றாக அடுத்துவரும் பக்கங்களில் சக்திவேல் ஆலயத்தினர் அனுப்பிவைத்த ஆக்கங்களைக் காணலாம்.

ஒரு சாதாரண "நினைவு மலர்" அளவில், ஆனால் முருகனின் அற்புதங்கள் எல்லோரிடமும் சென்றடையவேண்டுமென்ற ஆவலில் பெருந் தொகையான பிரதிகளை அச்சிடுவித்து வெளியிடுகின்றேன். இப்புத்த கத்தைப் பேணிக்காத்து முருகனின் அற்புதங்களைப் படித்துவரும் அதிகளவானோருக்கு முருகனின் அற்புதங்கள் நிகழ்ந்து கொண் டிருக்கின்றன என்பதை அறிந்து கொண்டிருக்கும் போது, இப்புத்தகத்தின் மகிமையை, இப்புத்தகத்தின் மூலமாகவும் முருகன் அருள்பலிப்பதை யதார்த்தமாக உணரக்கூடியதாக இருக்கின்றது.

பல சிரமங்கள் மத்தியிலும், பெரும் முயற்சியெடுத்து, முருகனது பேரருட் கடாட்சத்தினால் இப்பணியை வருடா வருடம் தொடர வேண்டிய அன்புநிலை ஏற்பட்டுவிட்டது. ~ ***அன்புடன் சி. சிவகுமாரன***

ஓம் சக்திவேல்

# சந்நிதியானின் புகழ்

கம்பர்மலையைச் சேர்ந்த கந்தையா நடேசபிள்ளை அவர்களின் மகனாகிய நான் கடந்த ஆண்டு (2010) செல்வச்சந்நிதி புத்தகத்தில் லண்டனில் உள்ள ஆலயங்களைப்பற்றி எழுதியிருந்தேன். அப்புத்தகத்தில் சிலவற்றை சிவகுமார் ஐயா அவர்கள் என்னிடம் தந்துவிட்டார். அவற்றை நான் எனது அலுவலக சுவாமித்தட்டில் வைத்து, என்னிடம் வருகின்ற வாடிக்கையாளர்களுக்கு செல்வச்சந்நிதியானின் புகழை எடுத்துரைத்து அவர்களிடம் கொடுத்தேன்.

அவர்கள் என்னிடம் சந்நிதியானின் புத்தகத்தை வாங்கும் பொழுது எதை நினைத்து வாங்கினார்களோ, அக்காரியம் சிலருக்கு இரண்டு, மூன்று தினங்களிலும், சிலருக்கு ஓரிரு வாரங்களிலும் நிறைவேறியதாகக் கூறினார்கள். இவ்வாறாக ஆச்சரியம்மிக்க அற்புதங்கள் நிகழ்ந்து உரு வானதே எங்கள் "சக்திவேல் ஆலயம்"

தற்போது சக்திவேலன் எனது அலுவலகத்தில் ஒரு சிறிய இடத்திலிருந்துகொண்டு, வரும் பக்தர்களின் குறைகளைத் தீர்த்து அருள்புரிகின்றார். அதுமட்டுமன்றி சக்திவேலன் சிலநேரங்களில் நேரடியாக வந்து காட்சியளித்து வருகின்ற பக்தர்களின் குறைகள், தோஷங்களை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கூறுவார். இதன்பிரகாரம் லண்டனில் மட்டுமல்லாது அயல்நாடுகளிலிருந்தும் அடியவர்கள் வந்து நற்பலனை அடைகின்றனர். மிக விரைவில் அதிகளவு மக்கள் கூடி வணங்கத் தக்கதாக, எம்பெருமான் புதயதோர் இடத்தில் கோயில்கொள்ள இருக் கின்றார் என்பதும் முருகனின் கருணையேயாகும்.

நான் முன்பு நன்றாக மாமிசம் சாப்பிடுவேன். சில நாட்களில் மாலை 6 மணிக்குப்பின் சாப்பிட்டதுண்டு. எப்போது சக்திவேலன் அருட்காட்சி தந்தாரோ அன்றிலிருந்து இன்றுவரை மாமிசமின்றி இருந்துவருகின்றேன்.

சக்திவேல் ஆலயத்தை, முதன்முதலாக திரைச்சீலை அனுப்பி ஆரம்பித்துவைத்தவர் எமது சிவகுமார் ஐயா அவர்களே. அதுமட்டுமன்றி இன்று சக்திவேலனுக்கு ஐந்து கிலோ எடையுள்ள ஐம்பொன்னாலான வேல் ஒன்றையும் அன்பளிப்பாக அனுப்பிவைத்துள்ளார். இன்று சக்தி வேலன் லண்டனில் உள்ள பக்தர்களின் குறைகளைத் தீர்த்து அருள்மழை பொழிகின்றார். சக்திவேலனின் புகழுக்குரியவர் செல்வச்சந்நிதியான் என்பதை உலகிற்கு எடுத்துரைக்கின்றேன்

- N. S. Karan

Shakthivel Hindu Association

www.shakthivel co.uk

E-mail: omshakthivel@gmail.com

T.P. 0208 478 9636

# சரியைத் தொண்டு புரிந்ததனால் கிடைத்த பலன்

இந்தியா-தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமதி கங்கா அமலன் ஆகிய நான் தற்போது லண்டனில் வசித்து வருகின்றேன். எனது கணவர் ஸ்ரீலங்கா-யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். எனது மற்றும் எனது கணவரின் வதிவிட உரிமைக்காக பல தடவைகள் விண்ணப்பித்தும் கைகூடவில்லை. இதனால் கவலையடைந்திருந்தேன்.

சக்திவேலன் ஆலய பூசகர் சுதாகரன் அவர்கள் சென்ற வருட சந்நிதி "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற புத்தகமொன்றை என்னிடம் தந்தார். இதன்காரணமாக முருகப்பெருமானை வணங்க வேண்டும், தொண்டு புரிய வேண்டுமென்ற பெருவிருப்பு என்னிடம் ஏற்பட்டது. சந்நிதி முருகனே இங்கு சக்திவேலனாக கோயில்கொண்டபின் தினமும் முருகனுக்கு சரியைத்தொண்டு புரிந்து வருகின்றேன். இதன்காரணமாக அசைவம் சாப்பிடுவதில் வெறுப் பேற்பட்டு, இதை பூரணமாக நிறுத்திவிட்டேன். இதன்பின் எங்களுக்கு சீக்கிரமே விஷா கிடைத்துவிட்டது. இறைவனுக்கு தொண்டுபுரிவோர் ஒருபோதும் கைவிடப் படமாட்டார்கள். அவ்வாறே எல்லாத் தடைகளையும் தாண்டி வெற்றியைத் தந்தான் சக்தி வேலன்.

*இந்திய முகவரி:*
6, 3வது தெரு, துரைசாமி நகர்,
கீழ்கட்டளை,
சென்னை 600 117
தமிழ்நாடு, இந்தியா.

*இப்படிக்கு,*
***கங்கா அமலன்***
248, Ley Street,
ILFORD, IG1 4BP,
U.K.

---

# அருளும், அற்புதமும் நிறைந்த சந்நிதிப் புத்தகம்

ஆட்டோ உரிமையாளராகிய வியாபாரிமூலையைச் சேர்ந்த, புஸ்பநாதன் செந்தில் ஆகிய எனக்கு, கிராம அலுவலர் திரு. லம்போதரன் அவர்கள் சென்றவருட சந்நிதிப் புத்தகம் ஒன்றை வழங்கினார். எனது குடும்பத்தினர் எல்லோரும் சந்நிதியானின் பக்தர்களாவர். மிகுந்த விருப்புடன் இப்புத்தகத்தைப் படித்தபின், என்வாழ்வில் அதிசயிக்கத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுவருகின்றேன். இதனால் இப்புத்தகத்தை என்றுமே எனது ஆட்டோவில் பாதுகாத்து எங்குசென்றாலும் கூடவே எடுத்துச் செல்வேன்.

பல வருடங்களாக தடைப்பட்டுவந்த எனது விருப்பத்திற்குரிய திருமணம் நிறைவேறும் கட்டத்தை அடைந்துவிட்டது. பெண்ணின் பெற்றோருடன் இணைந்து வீடுகட்ட ஒரு காணியும் கொள்வனவு செய்துள்ளேன். மேலும் ஆட்டோ சவாரிகள் கிரமமாக ஒழுங்கமைந்து, முருகனருளால் நாளாந்தம் நல்ல வருமானமும் கிடைத்து வருகின்றது.

*"சஞ்சலங்கள் தீர்ப்பவன் சந்நிதிச் செல்வன்"*

~ **புஸ்பநாதன் செந்தில்**

# சந்நிதியான் ஆச்சிரமம்
# - பன்முகப் பணிகள் -

**– வல்வையூர் அப்பாண்ணா –**

சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன். அந்தளவிற்கு "சந்நிதி எனில் அன்னதானம், அன்னதானம் எனின் சந்நிதியே" என அனைவரதும் வாயில் உச்சரிக்கப்பட்டதற்கு ஏதுவாக செல்வச்சந்நிதிச் சுற்றாடலில் 40 க்கும் மேற்பட்ட மடங்கள் ஒரு காலத்தில் இயங்கி வந்தன. திருவிழாக் காலங்களிலும் ஏனைய விசேட நாட்களிலும் எல்லா மடங்களிலும் பசியாற அன்னதானம் வழங்கப்பட்டு வந்தபோதும், ஆற்றங்கரை ஓரமாக சந்நி திக்குத் தெற்கே அமைந்திருந்த **"ஆனந்தா ஆச்சிரமம்"** எந்நாளும் பசியாறிச் செல்ல வழிசமைத்து வந்தமையினால், ஆனந்தாச்சிரமம் அதன் அன்பான சேவையினாலும்-ஒழுங்கான நிர்வாகத்தினாலும் முதன்மைபெற்று விளங்கியது. 1940களில் அமரர் மயில்வாகனம் சுவாமிகளினால் ஆரம் பிக்கப்பட்டு ஏறக்குறைய 40 ஆண்டுகள் பணிசெய்த பின்னர் மயில்வாகனம் சுவாமிகள் அமரத்துவம் அடைந்தார். பின்னரும் சீரிய பணியினைத் தொடர்ந்த ஆச்சிரமம் உட்பட, அநேகமாக அனைத்து மடங்களுமே போர்ச்சூழலின் காரணமாக சேதமுற்று இயங்க முடியாநிலை வந்தது. சந்நிதிச் சுற்றாடலில் வசித்துவந்த மக்கள் அனைவரும் வெளியேற முருகன் மட்டுமே தனித்திருக்க வேண்டிய ஒரு நிலையும் வந்தது. ஓரளவு நிலை மைகளில் மாற்றம் வர சந்நிதிச் சுற்றாடல் படிப்படியாக மீளவும் மக்கள் நடமாட்டம் காண ஆரம்பித்தது.

**சந்நிதியான் ஆச்சிரமம் தோற்றமும் வளர்ச்சியும் :**

ஆனந்தாச்சிமத்தின் நிர்வாகியான மயில்வாகனம் சுவாமிகளுடன் வலமும் இடமுமாக இருந்த திரு. மோகனதாஸ் சுவாமிகள், மயில்வாகனம் சுவாமிகளையே தமது குருவாகக் கொண்டும் அன்னாரது அறிவுரையின் பிரகாரமும் 1988 பங்குனி உத்தர நன்னாளில், சந்நிதியான் வாசலுக்கு நேராக உள்ள வீதியில் "அரசம்மா மடத்தில்", **"சந்நிதியான் ஆச்சிரமம்"** தோற்றம் பெற்றது. சந்நிதியான் ஆச்சிரமத்து ஆரம்பகாலம் மிகவும் சிரமமான காலமாக இருந்தபோதும், மயில்வாகனம் சுவாமிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிவும்-அனுபவமும், மோகனதாஸ் சுவாமிகளின் விடாமுயற்சியும் படிப்படியாக ஆச்சிரமம் தனது பணியில் முன்னேற்றம் கண்டது. 1990களில் சந்நிதியான் ஆச்சிரமம் தமது நித்திய அன்னப்பணியினை ஆரம்பித்த காலம் முதல், முருகனைத் தரிசிக்கவரும் அடியார்கள் எந்நேரமும், எத்தனை பேராயினும் பசியாறிச் செல்ல முடிந்தது. கோயில் சுற்றாடலில் "முருகனே கதி" எனவிருந்த வயதுமுதிர்ந்த பலரும் நித்தமும் உணவுபெற்று வந்தனர். ஆச்சிரமத்துக்கு வரும் அடியார்கள்

பலரும் கொடுத்த ஆதரவு பெருகிவர நித்திய அன்னப்பணி தொய்வின்றி சீராக நடந்தேறி வந்தது.

மறைந்த முருகேசு சுவாமிகளும், இன்னும் சிலரும் கொடுத்த தளராத ஊக்கத்தினாலும் பெருந்தகை ஒருவரின் காணி நன்கொடையினாலும், சந்நிதியான் ஆச்சிரமம் தற்போதிருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. முருகேசு சுவாமிகளதும் - அவரது தொண்டர்களது பெரும் உடல் உழைப்பினால் வளாகத்தில் புதிய கட்டிடங்கள் உருவாகின. தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அதற்கேற்றாற் போல கட்டிட விஸ்தரிப்புப் பணிகளும் முனைப்புப் பெற்று, ஈற்றில் 05-05-1995ல் தற்போதைய இடத்திற்கு சந்நிதியான் ஆச்சிரமம் இடம்மாறி பணிகளைத் தொடர்ந்தது. புதிய இடமாற்றத்திற்கு மூலமும் காரணமுமாகவிருந்த முருகேசு சுவாமிகள் 17-03-1997ல் சிவபதமெய்தினார். அவர்களது மறைவுக்குப் பின்னர் ஆச்சிரமத்தில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்திற்கு "முருகேசு சுவாமிகள் நினைவு மண்டபம்" என மோகனதாஸ் சுவாமிகள் பெயர்சூட்டி, அன்னாருக்கு தமது நன்றியினைக் காண்பித்தார். இந்த மண்டபத்திலே தான் இந்நாளில் பிரதி வெள்ளிதோறும் அறுபத்துமூவர் குருபூசையும் - மகேஸ்வர பூசையும் நடைபெற்று வருகிறது.

**நித்திய அன்னப்பணி :**

நித்திய அன்னப்பணியே சந்நிதியான் ஆச்சிரமத்தின் சுவாசம். இதுவே மூல பணி. முதற்பணி. "முருகன் காலடியே சரணம்" எனக் கோயிலிலும் கோயிற் சுற்றாடலிலும் நிரந்தரமாகத் தங்கியுள்ள 73 முதியவர்கள் இந்த நித்திய அன்னப்பணியினால் பயன்பெறுகிறார்கள். அரசம்மா மடத்தில் ஆரம்பமான இப்பணி சந்நிதியான் ஆச்சிரமத்திலும் தங்குதடையின்றித் தொடர்கிறது.

குடும்பங்களினால் கைவிடப்பட்டு, உயிர்வாழ வழிதேடி முருகனையே தஞ்சமென வந்து தங்கியுள்ள இவர்களுக்கு மூன்று வேளை உணவு - இரண்டு நேர தேநீர் - வருடத்தில் இரு முறை உடுபுடவைகள் வேட்டிகள், மாரிகால ஆரம்பத்தின் முன்னர் போர்வைகள் என சந்நிதியின் ஆச்சிரமம் இவர்களைப் பராமரித்து வருகிறது. தினமும் மதியநேர உணவு முடிந்து வெளியே வரும்போது அவர்கள் முகங்களில் நிறைந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் காணப்படுவதை நாம் கண்ணாரக் காணலாம். கோயிலடியிலிருந்து ஆச்சிரமத்துக்கு நடந்துவர முடியாத நான்கைந்து பேருக்காக, அவர்கள் உணவுக்காக அமர்ந்திருக்கும் வரிசையிலேயே அடுக்கப்பட்டிருக்கும் அவர்களது தட்டுகளில் உணவு இட்டு அவர்களது இருப்பிடங்களுக்கே அனுப்புவதனையும் நாம் தினமும் காண்கிறோம்.

இந்த 73 பேரைத் தவிரவும், சந்நிதியானைத் தினமும் தரிசிக்கவரும் அடியார்கள் - அது ஐந்து பேராயினும் சரி - ஐம்பது பேராயினும் சரி -

ஐந்நூறு போராயினும் சரி அன்னதானம் அளித்து பசிபோக்கும் அட்சய பாத்திரமாக சந்நிதியான் ஆச்சிரமம் சேவையாற்றி வருகிறது.

**சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தோற்றம் :**

அரசம்மா மடத்தில் ஆச்சிரமம் தோற்றம்பெற்ற காலம் முதல் வெள்ளிக்கிழமைகளில் வள்ளியம்மன் வாசலில் உள்ள பூவரச மரத் தடியிலும், பின்னர் பிள்ளையார் வாசலிலுமாக பஜனை நிகழ்வுகள் நடந்துள்ளன. அதிலுள்ள பல்வேறு பிரச்சனைகள் காரணமாக, சந்நிதியான் ஆச்சிரமத்து வளாகத்தினுள்ளே உள்ள "கேட்போர் கூடத்துக்கு" இந்த பஜனை நிகழ்வுகள் மாற்றப்பட்டன. பிரதி வெள்ளி தோறும் நடைபெறும் இந்நிகழ்வுகளை ஒருங்கமைத்து - திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்காக ஆச்சிரம சுவாமிகளால் மேற்காணும் **"சைவ கலை பண்பாட்டுப் பேரவை"** தோற்றம் பெற்றது. இந்தப் பேரவையின் தோற்றம், வெள்ளி நிகழ்வுகளில் பல மாற்றங்கள் பெற்று பஜனை, சொற்பொழிவு, வில்லுப்பாட்டு, கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் எனப் பலவிதமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. அனுபவம் வாய்ந்த பலருக்கும் இடமளிப்பதுடன், புதியவர் களையும் அழைப்பித்து ஊக்கப்படுத்தி நிகழ்வுகளைத் திறம்பட நடாத்தி வருகின்றனர் பேரவையினர்.

**ஞானச்சுடர் :**

சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பிந்திய பரிணாமமே **"ஞானச்சுடர்"** வெளியீடாகும். சந்நிதி முருகன் புகழ்மணக்க சைவமும் தமிழும் தழைத்தோங்க தனித்துவமான ஒரு ஆன்மீக சஞ்சிகையாக, 1998 தை மாதத்தில் **"ஞானச்சுடர்"** முதற்பிரதி தோற்றம்பெற்று பிரகாசித் தது. ஆரம்பத்தில் சாதாரண அச்சுமுறையில் 250 பிரதிகளுடன் வெளி யாகிய மாதாந்த ஆன்மீக சஞ்சிகையான "ஞானச்சுடர்" இன்று 2750 பிரதிகளாக கணனி அச்சுப் பதிப்பில் - அழகிய படங்களுடன் வெளியாகிறது. அச்சேறும் 2750 பிரதிகளில் 250 பிரதிகள் வெளிநாட்டு சைவ அபிமானிகளுக்கு தபால்மூலம் அனுப்பப்படுகிறது என்பது குறிப்பிடவேண் டிய அம்சம். ஞானச்சுடரில் ஆரம்பம்முதலே விளம்பரம் எதுவும் வெளி வந்ததில்லை. இதன் பிரதிகளை கடைகளில் வாங்கமுடியாது. மலரின் ஆசிரியர் என்றொருவர் இல்லை. ஆனால் ஆக்கங்களைப் பரிசீலித்து முடிவுசெய்ய ஆச்சிரம சுவாமிகள் தலைமையில் ஒரு மலர்க்குழு இயங்கி வருகிறது. ஆச்சிர சுவாமிகளின் மேற்பார்வையில், பேரவையினர், ஆக்கங்களை அளிப்போர், அச்சுக்கூடத்தினிற் பணிபுரியும் ஆண், பெண் ஊழியர்கள் அனைவரதும் அயரா உழைப்பின் மாதாந்த பிரசவமே "ஞானச்சுடர்" வெளியீடாகும். 13 ஆண்டுகள் கடந்த நிலையில இதுவரை 165 "ஞானச்சுடர்" மாதாந்த வெளியீடுகள் வெளிவந்துள்ளன.

இளமை ததும்பும் முருகன் திருத்தோற்றம். "ஞானச்சுடர்" அட்டையில் மையத்திலும், பேரவையின் இலச்சினையும் - மறைந்த

மயில்வாகனம் சுவாமிகளின் உருவப் படமும் இரு மருங்குமாக அட்டைப்படம் ஜொலிக்கிறது. மயில்வாகனம் சுவாமிகளின் உருவத்தை அட்டையில் நிரந்தரமாகப் பொறித்திருப்பது, சந்நிதியான் ஆச்சிரமத்து சுவாமிகள் அவர்மீது கொண்டுள்ள பற்று - பாசம் - குருபக்தி ஆகியன வற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## இலவச வைத்திய சேவை:

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஆற்றப்படுகின்ற நித்திய அன்னப் பணிக்கு இணையாக இல்வச மருத்துவ சேவையும் முதன்மை பெறுகிறது. சந்நிதியானின் ஆலயத்தில் நிரந்தரமாகத் தங்கியுள்ள ஆதரவற்றோருக்கும், ஆச்சிரமத்தை அடுத்துள்ள அயலூர்களிலிருந்தும் வரும் நோயாளர்கள் வாராந்தம் 140 பேர்வரை இந்த மருத்துவ சேவையினாற் பயனடைகின்றனர். 2011 ஒக்டோபர் மாதத்துடன் ஆச்சிர மருத்துவ சேவைக்கு அகவை பத்து நிறைவடைகின்றது. வாரத்தில் இரண்டு நாட்கள் (புதன், ஞாயிறு) நடைபெறும் இந்த இலவச மருத்துவசேவைப் பணி ஆச்சிரம வளாகத்திலேயே நடைபெற்றுவந்தது. 01-01-2010 ஜனவரி 1ம் தேதி முதல் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு தெற்காக 500 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்ட புதிய மருத்துவ சேவைக் கட்டடத்துக்கு இடம்மாறியது. காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மகேஸ்வரன் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு ஆற்றிவந்த அளப்பரிய உதவிகளை நினைவுகூர்ந்து, அக் கட்டடத்துக்கு "மகேஸ்வரன் ஞாபகார்த்த இலவச மருத்துவ சேவைக் கட்டிடம்" என பெயர் சூட்டியுள்ளார் ஆச்சிரம சுவாமிகள். ஆரம்ப காலத்தில் வைத்திய அதிகாரி திரு. சி. கதிர வேற்பிள்ளை அவர்களும், அவரைத் தொடர்ந்து வேறு சில வைத்தியர் களும் மருத்துவ சேவைப்பணி செய்தனர். தற்போது பல வருடங்களாக புதன்கிழமைகளில் டாக்டர் பொ. சின்னத்தம்பி அவர்களும், ஞாயிற்றுக் கிழமைகளில் டாக்டர் சி. சிவயோககுரு அவர்களும் உள்ளார்ந்த அர்ப்பணிப்புடன் மருத்துவப் பணியாற்றி வருகின்றனர். நோயார்களுக் கான எந்தவொரு மருந்தும் வெளியே வாங்கும்படியான மருந்துச்சிட்டை எதுவும் வழங்கும் வழக்கம் இங்கில்லை. பெறுமதிமிக்க மருந்துகள் உட்பட அனைத்து மருந்துகளும் இலவசமாகவே வழங்கப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.

கைதடி அரசினர் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையினால், கடந்த சில மாதங்களாக ஒன்றுவிட்ட ஒரு செவ்வாய்க் கிழமைகளில் சித்த ஆயுர்வேத வைத்திய சிகிச்சை இதே மருத்துவ சேவைக் கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. மருந்துகள் - எண்ணை வகைகளுடன் வைத்தி யர்கள், தாதியர்கள் என அனைவருமே அவர்களது அம்புலன்ஸ் வாகனத் திலேயே வருகைதந்து பணி செய்கின்றனர். இந்த சேவையினாலும் பலரும் பயன்பெற்று வருகின்றனர்.

**குருபூசைகளும் வழிபாடுகளும் :**

நால்வர் குருபூசை தினங்கள், மறைந்த மயில்வாகனம் சுவாமிகள் குருபூசைதினம், முருகேசு சுவாமிகள் குருபூசை தினம் ஆகியவை சிறப்புறக் கொண்டாடப்படுகிறது. இவற்றைவிட பிரதி வெள்ளிதோறும், முருகேசு சுவாமிகள் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறுகின்ற அறுபத்துமூவர் மகேஸ்வர பூசை மகத்தானது. 63 நாயன்மார்களாக 63 பேரும், அவர்களோடு முருகனும் ஒருவராக 64 பேர்கள் மண்டபத்தில் அமர்த் தப்பட்டு, நெய்வேத்தியம் படைத்து, தீபம் காட்டி, தெட்சணை வைத்து, சிவபுராணம் ஓதி நடைபெறும் பூசைமுறை பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்.

**விழாக்களும் பரிசில்களும் :**

ஆண்டுதோறும் வைகாசிப் பெருவிழா திருவாசக விழா, அருண கிரிநாதர் விழா, சேக்கிழார்விழா போன்ற விழாக்கள் பலவும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. வெள்ளி வாராந்த நிகழ் வுகளின் போதும்சரி, இவைபோன்ற விழாக்களிலும் சரி கற்றறிந்த பலரதும் சொற்பொழிவுகள் விசேட அம்சமாக இடம்பெறுவது வழமை. இதைவிட, இவ்விழாக்களை முன்னிட்டு கல்லூரி மாணவர் களிடையே நடாத்தப்படுகின்ற பண்ணிசைப் போட்டி, பேச்சுப் போட்டி, திருக்குறள் போட்டி என்பவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குகொள்ளும் வாசகர் போட்டி ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் நடைபெறுகிறது. வருடம் முழுவதும் வெளியாகும் ஞானச்சுடர் புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் கேள்விகளுக்கு வாசகர்கள் பதிலளித்து, சிறந்த பரிசில்களைப் பெற்று மகிழ்கிறார்கள்.

**விருது வழங்கல்:**

வைகாசிப் பெருவிழாக் காலங்களில் பல்துறைசார்ந்த சமூகப் பிரமுகர்களும், கற்றறிந்த பெரியோர்கள் விசேடமாகக் கௌரவிக் கப்படுகின்றனர். 1993 முதல் 2006 வரை தொடர்ந்த இந்த சமுதாயப் பிரமுகர்களுக்கான கௌரவிப்பில் இதுவரை எட்டுப்பேர் கௌரவிக்கப் பட்டுள்ளனர். "ஞானச்சுடர்" சஞ்சிகைக்கு ஆக்கங்களை அளித்துவரும் கட்டுரையாளர்களுக்கான கௌரவிப்பு பிரதிமாதமும் ஞானச்சுடர் வெளியீட்டு வேளையில் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை நிகழ்த்துவோருக்கான கௌர விப்பு, வாராந்த நிகழ்வுகளில் பங்குகொண்ட பல்துறைப் பிரமுகர்களுக்கான கௌரவிப்பு, வாசகர் கௌரவிப்பு என இவை ஆண்டுதோறும் தொடர் கின்றன. இந்த வேளைகளில், கௌரவிப்புக்கான கேடயங்களும் அளிக் கப்பட்டு பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்படுகின்றனர்.

**புத்தக வெளியீடுகள்:**

அறிஞர் பெருமக்களின் சமயம் சார்ந்த நூல்கள் பலவும் சைவகலை பண்பாட்டுப் பேரவையிரால் ஆச்சிரம கேட்போர் கூடத்தில்

ளியிடப்பட்டுள்ளது. இந்த வரிசையில் இதுவரை பத்துக்கும் அதிகமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. "ஞானச்சுடர்" வெளியீட்டு நிகழ்வினைப் போன்று வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆகியன நிகழ்த்தப்பட்டு, நூலா சிரியர்கள் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்படுகின்றனர்.

**சமுதாயப் பணி :**

நித்திய அன்னப்பணி, இலசவ மருத்துவசேவை போன்றே மக்கள் சமுதாயப் பணியும் வருடம்பூராவும் தொடர்கிறது. இந்த சமுதாயப் பணியானது இன்று பல்வேறு உட்பிரிவுகள் கொண்டதாகப் பரிமாணம் பெற்றுள்ளது. கண்களில் குறைபாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகர ணங்கள் வழங்குதல், வசதிகுறைந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு துவிச்சக்கரவண்டி வழங்குதல், உயர்கல்வி (பல்கலைக் கழக) மாணவர் களுக்கான மாதாந்த நிதியுதவி, வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாண வர்களுக்கு தனியார் கல்விப் போதனைக்கான மாதாந்த உதவி எனப் பலப்பல.

இதைவிட, 60க்கும் அதிகமான குடும்பத்தினர் பிரதி மாதமும் கடைசி வெள்ளியன்று மாலை வேளையில் தங்களுக்கான மாதாந்த (அரிசி முதலான) உணவுப் பொருட்களுடன் பணமும் பெற்றுச் செல்கின் றனர். அந்தந்த குடும்ப வருமானம், வீட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கை, குழந்தைகளின் தொகை ஆகியவற்றைப் பொறுத்து இந்த உணவுப் பொருட்பங்கீடும் பணத்தொகையும் வித்தியாசப்படுகிறது.

உதவிக்கான கோரிக்கை கிடைக்கப்பெறுமிடத்து அந்தந்த கோரிக்கை சம்மந்தமான நம்பகத்தன்மை பற்றி குடும்பத்தாரிடமும், அயலவர்களிடமும், பொது நிறுவனப் பிரதிநிதிகளிடமும் விசாரித்து அறிந்து கொண்டபின்னரே விநியோக அளவு தீர்மானிக்கப்படுகிறது. மாணவர் களாயின் கல்லூரி அதிபர்கள் - வகுப்பாசிரியர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு தகவல்கள் பெற்றபின்னரே உதவிகள் முடிவு செய் யப்படுகின்றன.

யுத்த சூழ்நிலை காரணமாக பலதடவைகள் வடமராட்சிக்கு உள்ளே இடப்பெயர்வுகள் நடைபெற்றபோதும், 2004ம் ஆண்டு நடைபெற்ற கடல் அனர்த்த வேளையின்போதும் பலநாட்கள் தொடர்ந்து சமைத்த உணவுப் பொட்டலங்கள் வழங்கி, சந்நிதியான் ஆச்சிரமம் பசி போக்கியமையை பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் நினைவு கூறுகிறார்கள்.

**நிறைவாக.....**

இவையும் இன்னும் பலவுமாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் சேவைகள் அனைத்துக்கும் மூலகாரணன் சந்நிதி முருகனே! அவனது திருவருட் கடாட்சம், ஆர்வமுள்ள அன்பர்கள் பலரையும் தூண்டி பணமும்

- பொருளுமாகக் கிள்ளிக்கொடுக்க, ஆச்சிரமத்து சுவாமிகள் (அன்ன தானமாகவும், அனைத்து வகை உதவிகளாகவும்) அள்ளிக் கொடுக்கிறார். தினமும், ஆச்சிர வாளகத்திலுள்ள பூசையறையில் சுவாமிகள் பூசைசெய்யும் போதும்சரி, ஒவ்வொரு வெள்ளியன்றும் நடைபெறும் மகேஸ்வர பூசை வேளையில் தனது வெண்கலக் குரலில் சிவபுராணமும், தோத்திரங்களும் பாடும்போதும் சரி பார்த்திருப் போர் பரவசமடைகின்றனர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பீடாதிபதி ''அமுதகலாஜோதி'' திரு. மோகனதாஸ் சுவாமிகள் எப்பொழுதுமே, “இன்னும் என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?'' என்ற சிந்தனை வயப்பட்டவராகவே இருப்பர். ''சுவாமி! இந்த விடயம்பற்றி என்ன செய்யலாம்? என்று வினாவினால், **“எல்லாம் அவன் பார்த்துக் கொள்ளுவான்”** என்பதே பதிலாக வரும். அவர் அடிக்கடி உச்சரிக்கும் இந்த நான்கு வார்த்தைகளும் வெறும் சொல்லடுக்கு அல்ல. எப்பொழுதுமே அதிர்வினை ஏற்படுத்துகின்ற ''மந்திர ஒலி'' யாகும்.

***

## சந்நிதி செல்லுவோம் – ஸ்ரீவாணி –

சந்நிதி செல்லுவோம்! செல்வச் சந்நிதி செல்லுவோம்
சந்நிதி செல்லுவோம்! அம்மா சந்நிதி செல்லுவோம்
சந்நிதி செல்லுவோம்! ஐயா சந்நிதி செல்லுவோம்
சந்நிதி செல்லுவோம்! செல்வச் சந்நிதி செல்லுவோம்
(சந்நிதி செல்லுவோம்!)

பக்தரெல்லாம் ஒன்றுகூடிப் பாலனவன் அருளை நாடிப்
பாட்டுப்பாடி ஆட்டமாடிச் சந்நிதி செல்லுவோம்
சக்தியெல்லாம் காலில் கூட்டி சக்திமைந்தன் வேலை நம்பி
தந்தனத்தோம் தாளம்போட்டு சந்நிதி செல்லுவோம்
(சந்நிதி செல்லுவோம்!)

லண்டனிலே சக்திவேலன், கனடாவில் சந்நிதி முருகன்
கதிர்காமக் கந்தனாம், சந்நிதியில் வேலவனாம்
ஆவணியில் உற்சவமாம் ஆட்டமாடிப் பாட்டுப்பாடிக்
காவடியுடன் கூத்துமாடிச் சந்நிதி செல்லுவோம்
(சந்நிதி செல்லுவோம்!)

நேர்த்திதனை நிறைவேற்ற ஊணுறக்கமின்றி நாமும்
கால்களிலே சலங்கை பூட்டிக் கந்தனவன் நாமம் சொல்லி
காவடியாட்டத்துடன் உடுக்கையொலி ஓசையுடன்
காற்றினிலே மிதப்பது போல் கடுகதியாச் செல்லுவோம்
(சந்நிதி செல்லுவோம்!)

அன்னதானக் கந்தனிடம் ஆட்டமாடிச் செல்லுவோம்
ஆற்றங்கரை வேலனிடம் அழுதழுது செல்லுவோம்
கல்லோடைக் கந்தனிடம் கால்கடுக்கச் செல்லுவோம்
பூவரச மரத்தடியில் பஜனைபாடி வெல்லுவோம்
(சந்நிதி செல்லுவோம்!)

வேதனைகள் தீரவும் சோதனைகள் மாறவும்
நாதகீதம் பாடுவோம் நாமம் சொல்லி ஆடுவோம்
சாதனைகள் புரியவும் சத்தியமே வெல்லவும்
கந்தஷஷ்டியில் கந்தனவன் பால்பழமே அருந்துவோம்
(சந்நிதி செல்லுவோம்!)

சந்நிதியில் செல்வனாம் சஞ்சலங்கள் தீர்ப்பவன்
தஞ்சமென்று வந்தோரைத் தாங்கி அருள்புரிகின்றான்
ஆலமிலையில் பருப்புக்கறியுடன் அமுதும்தந்து ஆள்கிறான்
அற்புதங்கள் நிகழ்த்தி நாளும் அன்னதானம் தருகின்றான்
(சந்நிதி செல்லுவோம்!)

ஏழைசெல்வர் இல்லையே எல்லோரும் ஓரினம்
எங்கள் தெய்வம் முருகனே சந்நிதியின் வேலனே
வருத்தம் துன்பமின்றியே வாழ்க யாரும் வாழ்கவே
மங்கலங்கள் எங்குமே பொங்கிவாழ்க வாழ்கவே
(சந்நிதி செல்லுவோம்!)

## ஆனந்தம் ஆனந்தமே

ஆடிவரும் காவடியில் அழகுமுகம் தெரிவதும் ஆனந்தம் ஆனந்தமே
ஆடிவரும் காவடிக்கு வேலுமொரு துணையாகும் ஆனந்தம் ஆனந்தமே
தூக்குக் காவடிகள் ஆடிவரும் அழகினை கண்டிட ஆனந்தம் ஆனந்தமே
ஒய்யாரச் சிரிப்பினிலே என்னையே மறப்பதும் ஆனந்தம் ஆனந்தமே
தொண்டைமானாற்று தீர்த்தம் பாய்வதும் ஆனந்தம் ஆனந்தமே
பஞ்சாமிர்தக் குளிப்பினிலே உன்னையே காண்பதும் ஆனந்தம் ஆனந்தமே
ஆற்றங்கரை வீதியிலே அழகுரதம் பவனிவர ஆனந்தம் ஆனந்தமே
சிங்கார வேலுடன் ஆறுகசாமியைக் காண்பதும் ஆனந்தம் ஆனந்தமே
கோடான கோடி பக்தர் தேடியே வருகிறார் ஆனந்தம் ஆனந்தமே
சஞ்சலங்கள் தீர்ப்பவன் சந்நிதியின் வேலனென்றால் ஆனந்தம் ஆனந்தமே
ஆற்றங்கரை மணலிலே ஆரஅமர இருப்பதும் ஆனந்தம் ஆனந்தமே

*இப்புத்தகத்திற்கு*
*''சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்''*
*என்கின்ற நாமத்தைத் சூட்டியவர், முருகன் பதமடைந்த அடியார்மட நிர்வாகி அமரர் ம. வெங்கடாசலம்பிள்ளை ஐயா அவர்களை என்றும் நினைவுகூருகின்றோம். (ஆ-ர்)*

# நீதிமன்றத்திற்கு வந்த சந்நிதி முருகன்

## - இப்புத்தக தொகுப்பாளர் சி. சிவகுமாரன் -

**"தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், மறுபடியும் தர்மம் வெல்லும்"** - கண்ணபிரான்.

2007ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 14ம் தேதி முதன்முதலாக நீதிமன்றுக்குச் சென்றேன். அப்போது எனக்கு 50 வயது. கல்வி பயின்றுகொண்டிருந்த எனது மகனையும், சுற்றாடலிலுள்ள இன்னும் மூன்று மாணவர்களையும் என்னுடன் இணைத்து வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் வழக்காளியானவர், ஏழு வருடங்கள் எனது வீட்டில் வாடகையெதுவுமின்றி வாழ்ந்தவர். இவருக்கும் எங்களுக்கும் நேரடியான எந்தவொரு கோபதாபமும் இல்லை.

ஆனால் 2003ம் ஆண்டு எனது வீட்டு வேப்பமரத்தில் அம்மன் பெண்ணுருவில் தான்தோன்றியாகத் தோன்றியவுடன், அம்மனிடம் அதிசயிக் கத்தக்க அற்புதப் பலன்களை அடைந்துகொண்ட ஒருவரே, நன்றி மறந்த நிலையில், தான் மறைபொருளாக இருந்துகொண்டு இவ் வழக்கு ஏற்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்துள்ளார்.

அடியேன் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு ஆயத்தமாகிய வேளை, எனது வீட்டுவளவு வேப்பமரத்தில் கொழுகொண்டிருக்கும் அம்மனிடம் வேண்டுதல் செய்தேன். "ஆத்தாளே! எந்தச் சோதனையென்றாலும் தாங்கி வாழ்கின்றேன். ஆனால் கொடும்பாவிகளின் சூழ்ச்சிக்குள் உன்பிள்ளையை சிக்கவிட்டுவிடாதே. அப்படி நீ விட்டாயானால், விபூதி தரிப்பதை நிறுத்திவிடுவேன்-மதம்மாறி விடுவேன்'' என்று ஆத்தாளிடம் கண்ணீரால் உருகிவிட்டு நீதிமன்றத்திற்குச் சென்றேன்.

இந்த வழக்கிற்கு முன் ஐந்து வருடங்களாக தூண்டுதலின் பேரில், என்குடும்பம் சார்ந்த எல்லோரையுமே கண்ட இடத்தில் கெட்ட வார்த்தைகள் பேசியும், எச்சில் துப்பியும் தொடர்ந்துகொண்டிருந்த வழக்காளியானவர், இவ் வழக்கு நடந்துகொண்டிருந்த காலப்பகுதியிலும் இத்தீய நடவடிக்கைகளைத் தொடர்ந்துகொண்டிருந்தார். இதன்பின் எனது தரப்பு லோஜரின் ஆலோசனைக் கிணங்க, வெள்ளைச் சீருடையுடன் பாடசாலைக்குச் செல்லும்வேளையில் எனது பிள்ளைகளுக்கு எச்சில் துப்பும் கேவலமான செயலை வீடீயோவில் பதிவு செய்வித்து நீதிமன்றில் சமர்ப்பித்தேன்.

நீதிமன்ற வழக்கில் சரி, அல்லது வேறு எந்த கொடுமையை எங்களுக்குச் செய்தபோதும் அம்மன் எங்களைக் காப்பாற்றுகின்றா என்பதற்காக அசுர செயற்பாடுகளை மேற்கொண்டும், ஆலயத்திலுள்ள சகல சொத்துக்களைச் சூறையாடச் செய்வித்தும், ஆலயப் பூசைகளைத் தொடரமுடியாதபடி செய்து விட்டார்கள். வைத்தியத்தால் கைவிடப்பட்ட நோயால், துன்பங்களால் வேதனைப்பட்ட மக்களுக்கும், வாழ்வியலில் தடங்கல்கள் உள்ளோர்களுக்கும் அற்புதங்களை நிகழ்த்திவந்த அன்னையின் ஆலயம் பூட்டப்பட்டது, இதனால்

இன்னமும் பயங்கரக் கொடூரங்களுக்கு ஆளாகப்போகின்றோமே! தர்மம், நீதி, இறைவனே தோற்றுப் போகப்போகிறானா?" என்று மனம் வருந்தியபோது, **சந்நிதி முருகன் தானோடி வந்தான்.** "என்னிடம் அன்பு கொண்டு தொடர்ந்து எனது ஆலயத்திற்கு வருவாயாக" என்ற சந்நிதி ஐயனின் அருள் உத்தரவிற்கிணங்க, சந்நிதி முருகனையே பற்றிப்பிடித்தேன். முன்னைய காலங்களிலெல்லாம் முருகனின் தேர்த்திருவிழா, சூரன்போர் போன்ற விழாக் களுக்கு மட்டும்தான் அடியேன் சந்நிதிக்குச் சென்றதுண்டு. எனது ஆலயம் பூட்டப்பட்ட பின்பு அம்மனுக்கு அபிஷேகம், பூசைசெய்ய முடியாதுள்ளதே என்ற தாங்கொணாக் கவலை மேலிடும் போதெல்லாம் நேரம் காலம் என்றில்லாமல் சந்நிதிக்கே செல்வேன். சந்நிதியானிடமே உள்ளமுருகினேன். **"மந்திரமின்றிப் பூசை நடப்பதும், மந்திரத்துக்குள் அகப்படாதவனும் சந்நிதியான்"** என்பதை உணர்ந்துகொண்டேன். மந்திரம் மட்டுமல்ல, தந்திரோபாயங்களையும், சதித்திட்டங்களையும் தகர்த்தெறிந்தான் சந்நிதியான். ஒவ்வொன்றாகச் சஞ்சலங்களைத் தீர்த்துக் கொண்டே இருக்கின்றான்.

திருப்புகழ் தந்த அருணகிரிநாதரிடம் முருகப்பெருமான் வருவதை, அருள்பாலிப்பதைத் தடுத்துநிறுத்தவேண்டுமென்ற அசுர நோக்கங்கொண்ட பிரபுடமகாராஜன் என்பவன் அசுரவழியை நாடினான். இதனால் ஒருகணம் முருகனைக் காணாத அருணகிரிநாதர் நடந்திருப்பதை, ஞானதிருஷ்டியில் உணர்ந்துகொண்டார். **"அதலசேடனாரட அகிலமீதில் நீயாட"** என்று தொடங்கும் திருப்புகழை உள்ளமுருகிப் பாடினார். கலைவாணி முதற் கொண்டு சகல இறைமுகூர்த்தங்களையும், முருகனையும் மயிலையும் ஆடிவரவேண்டும் என்று பாடும்போது, அத்தனை தடைகளையும் உடைத்துக்கொண்டு முருகப் பெருமான் அருணகிரிநாதரிடம் வந்தார்.

முற்றுமுழுதாக சந்நிதி முருகனைப் பற்றிப் பிடித்தபின், நடக்க விருக்கும் வழக்குத்தவணைக்கு முதல்நாள் இரவு, முருகப் பெருமான் ஒரு தகவலைத் தந்தார். "நாளையும், இதற்கு அடுத்த தவணையும் நான் நீதிமன்றத்திற்கு வருகின்றேன்" என்றுகூறி, ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வீற்றிருந்து தான்வரும் காட்சியை முருகப் பெருமான் காட்சிப்படுத்திக் காட்டினார்.

எனது பிள்ளைகள் சீருடையுடன் பாடசாலைக்குச் செல்லும்போது தீய வார்த்தைகள் பேசி எச்சில் துப்பியதை வீடியோவில் பதிப்பித்ததனால், எம்மீது தொடுக்கப்பட்ட வழக்கானது வலுவிழக்கப்போவதைக் கருதி, எம்மைச் சிறையிலே தள்ளக்கூடிய பயங்கரமான அடுத்த சதித் திட்டத்துடன் நீதிமன்றம் வந்தார்கள்.

வழக்காளியின் மகன்களாகிய இருசிறுவர்களும் மன்றில் கூறினார்கள் "**எங்களைக் கொலைசெய்வோம்** என்று நாங்கள் பாடசாலைக்குச் செல்லும் போது பயப்பிடுத்தினார்கள்" என்றனர்.

இதைச் சொன்னவர்கள் ஏறக்குறைய பத்துப் பதினொரு வயதான சிறுவர்களானபடியால் அடுத்தகேள்வியின்றி எங்களுக்கான தண்டனைத் தீர்ப்பெழுத ஆயத்தமாகியபோது, முருகனருளால் எனது தரப்பு லோஜர் உடனடியாகவே விழிப்புடன் செயற்பட்டார். "உங்களுக்கு இவர்கள் என்ன

சொன்னார்கள்'' என்று லோஜர் சிறுவர்களைப் பார்த்துக் கேட்டவுடன், ''**எங்களுக்கு அடிப்பேன்** என்று சொன்னார்கள்'' என்று மாற்றிக் கூறினர். உண்மையிலே நாங்கள் பயப்பிடுத்தியிருந்தால் ஒன்றையே கூறியிருப்பார்கள்.

''நீதிமன்மன்றத்திலே வந்து றாமா (நாடகம்) போட்டுக் காட்டுகிறாயா! இனிமேலும் எச்சில் துப்புகிற சேட்டை வைத்துக்கொண்டால் தகுந்த தண்ட ணைக்காளாகுவாய்'' என்றவாறாக எச்சரிக்கை செய்யப்பட்டார் வழக்காளி.

இதன்பின் அடுத்த தவணைக்கு முன்பாகவே, வழக்காளியானவர் தனக்கு சார்பாக ஏற்பாடு செய்துவைத்திருந்த சாட்சியுடன் தகாத நடவடிக் கையில் ஈடுபட்டதனால், வழக்காளிக்கும் சாட்சிக்கும் பிரிதொரு வழக்கேற்பட்டு அச்சாட்சிகளது செயற்பாடுகளும் முருகனருளால் இவ்வழக்கில் இல்லாமல் போனது.

எங்கள் மீது என்ன குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டதோ இதன்பின் நடந்த குறுக்கு விசாரணையில் நாங்கள் அக்குற்றத்தைச் செய்ய வில்லையென வழக்காளி வாயாலேயே சொல்லவைத்தான் முருகப் பெருமான். 2 வருடங்களாகத் தொடர்ந்த வழக்கு 2009ம் ஆண்டு பங்குனி மாதமளவில் தள்ளுபடியானது.

இதுமாத்திரமல்ல பொலிசாரால் பல தடவைகள் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்பும் எச்சில் துப்புவதும், பெண்பிள்ளைகள் என்றில்லாமல் கெட்ட வார்த்தைகள் பேசுவதுமாக அடாவடிச் செயற்பாடுகள் பத்து வருடங்களாக இற்றைவரைக்கும் தொடர்ந்த படியேதான் இருக்கின்றன. இவ்வளவு சீண்டுதல்கள் செய்தும் நாங்கள் மோதலுக்கு வருகின்றோமில்லை என்ற காரணத்தால் இந்தவருடம் பங்குனி மாதம் 11 வயதுடைய எனது இரண்டாவது மகள் பாடசாலைக்குச் செல்லும் போது எச்சில் துப்பி, கைகளால் அடித்து தாக்கியுமுள்ளார். சென்ற 21-05-2011 அன்று இதற்கான விசாரணை வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது விசாரணையின் இறுதியில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். சிறுதண்ட னையுடன் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

அடியேன் இறைவனையே நம்பி ஒதுங்கிவாழுகின்ற சாத்வீக குணத் தால் சகலதையும் இறைவனிடமே சமர்ப்பித்து வாழுகின்றேன். எவரெவர்க்கு என்னென்ன பலன்கள் வேண்டுமென்று கேட்டு அடியேனிடம் வந்தவர்களுக் கெல்லாம், முருகனிடம் கேட்டுத் தவணைகுறித்து விரும்பிய வரங்களைப் பெற்றுக்கொடுத்த பல நூற்றுக்கணக்கான சம்பவங்கள் உள்ளன. ஆனால் அடியேனை மட்டும் பெருமான் சோதித்துக் கொண்டிருக்கின்றார்.

எம்பெருமான் இவ்வழக்கில் நீதியை நிலைநிறுத்தியதனால் முருகனின் அன்பிற்குள் வயப்பட்டு, 2009ம் ஆண்டிலிருந்து, ''அற்புதங்களும் அனுக்கிர கங்களும்'' என்ற இப்புத்தக வெளியீட்டினை, எம்பெருமானின் நெறிப்படுத்தலுடன் செய்துகொண்டிருக்கின்றேன். முருகனின் அற்புதங்களை வெளிக்கொணர் வதனால் சமயவளர்ச்சிக்கும் இந்நூல் துணையாக அமையப்பெற்றுள்ளதுடன், கடந்த மூன்றரை வருடங்களாகப் பூட்டப்பட்டிருந்த அன்னையின் ஆலயத்தையும் இவ்வருட ஆனி உத்திரத்திலன்று திறந்து பூஜை ஆற்றுவதற்கும் பெருமான் அனுக்கிரகித்துள்ளார்.

# பக்கத்துணை நின்று காத்தவன்

## - பொன்னர் வல்லிபுரம், மாணாங்கானை, வல்வெட்டித்துறை -

சி. சிவகுமாரு ஐயா வெளியிடும் முருகனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும் என்ற நூலினை 2009ம் ஆண்டில், அமரர் வெங்கடா சலம்பிள்ளை ஐயா அவர்கள் என்னிடம் தந்தார். இதை நான் மறந்து வாசிக்காமல் வைத்துவிட்டு, 2011ம் ஆண்டு வாசிக்க சந்தர்ப்பம் கிடைத் தது. அதில் முருகப்பெருமான் தனது மெய்யடியார்களுக்கு, மாறுவேடத் திலும், கனாவிலும், அகக்காட்சியிலும் நெறிப்படுத்திய அற்புதங்களை வாசித்து அறிந்துகொண்டேன்.

இதைப்படித்தபின், எனது ஞானபண்டிதன் முருகன் எனக்கு ஒருகாலும் தன்னுடைய காட்சியைக் காட்டவில்லையே என்று வேதனைப் பட்டுக்கொண்டு திரிந்தபோது, "உனக்கு ஆபத்துக்கள் வந்த வேளைகளி லெல்லாம் நான்தானே பலதடவைகள் உன்னருகில் நின்று உன்னைக் காப்பாற்றியிருக்கிறேன்" என்று எனக்கு விளங்கவைத்ததுடன், முன்னைய காலங்களில் எனக்கு நேர்ந்த ஆபத்துக்களையெல்லாம் மீண்டும் ஞாபகப் படுத்திக் காட்டினார் ஞானபண்டிதன்.

பெருமளவான தோத்திரப்பாக்கள் எனக்கு மனப்பாடமாக உள்ளன. செல்லுகின்ற ஆலயங்களிலெல்லாம் பாடிக்கொண்டே வணங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். சந்நிதி முருகனிடமே அதிகளவில் சென்றுவருவேன். செல்லுகின்ற ஒவ்வொரு தடவைகளிலும் அடியார் மடத்திற்கும் சென்று அவன் அமுதுண்பேன். இதன்பின் நான் அடிக்கடி என்னையறியாமல் வீழ்ந்து கொள்ளும் நிலையிலிருந்து எவ்வளவோ தெளிவு கிடைத்துவிட்டது.

உண்மையிலே முன்னைய காலங்களில் நான் எவ்வளவோ கடுஞ் சுகவீனங்களில் இருந்து தப்பியுள்ளேன். காய்ச்சல் வந்தால் பலதடவைகள் என்னையறியாமல் விழுந்தெழுவேன். இதுதவிர நான் பஸ்வண்டிகளில் இருந்து இறங்கிய வேளைகளிலும் திடீரென வீழ்ந்தபோது எதுவித பாதிப்புமின்றி எம்பெருமான் காப்பாற்றியிருப்பதை நினைவுகூறுகின்றேன். நான் மதுபோதைப்பொருளோ, புகைத்தலோ பாவிப்பதில்லை என்பதையும் அறிவித்துக்கொண்டு, சந்நிதி முருகனின் பெருமையை வெளியிடும் புத்தகத்தில் இதையும் சேர்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையில் சிவகுமாரு ஐயாவிடம் சமர்ப்பித்தேன்.

ஒருதடவை வெற்றிலைக்கேணிக்கு பஸ்சில் சென்றபின் இறங்க முற்பட்டபோதும் 2ம் படிதவறி நிலத்தில் கால்வைத்தபோது விழுந்து பஸ் சில்லினுள் நெரியப்பார்த்தேன். முருகப்பெருமான் அருளால் ஒரு தீங்கு மின்றித் தப்பினேன். இப்படியாக எனக்குவந்த இடையூறுகளில் ஒருவித மான அங்கப்பழுதுமின்றிக் காப்பாற்றியதே - எனக்குத்தந்த காட்சியைவிட வேறு என்ன காட்சிவேண்டுமென எனது ஞானபண்டிதன் எனக்கு விளங்கவைத்தான்.

0710836901

## மனமுவந்து நிதியளித்தோர் விபரம்

| | |
|---|---|
| லண்டன் சக்திவேல் ஆலயம் ஊடாக - N.சுதாகரன், பிரதீபன் | 100000.00 |
| பருத்தித்துறை பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள் | 10000.00 |
| பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை. (ஊறணி) | 7600.00 |
| வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம், பருத்தித்துறை | 5000.00 |
| திரு. திருமதி இராமநாதன் திரவியம், பழவத்தை, சித்தங்கேணி | 5000.00 |
| திருமதி ராகினி (ஞானகுமாரி) பிரான்ஸ் | 4000.00 |
| கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம் | 4000.00 |
| S. சிவாஜினி, அந்தணத்திடல், சரசாலை. (உடுப்பிட்டி) | 3500.00 |
| யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை - அதிபர், ஆசிரியர்கள் | 3100.00 |
| இலங்கை வங்கி, விரிவாக்கல் கிளை, வல்வெட்டித்துறை. | 2800.00 |
| வல்வெட்டி கருணாநிதி சனசமூக நிலைய மக்கள் | 2500.00 |

| | | | |
|---|---|---|---|
| வல்வெட்டி இ.த.க. பாடசாலை | 2000.00 | ஆசிரியர் நலன்புரிச்சங்கம், | |
| ஓர் அன்பர், நியூசிலாந்து | 2000.00 | சிதம்பரக் கல்லூரி, V.V.T | 1000.00 |
| நாகமுத்து ஆசிரியை கம்பர்மலை | 2000.00 | ஜெயவதனா தங்கவடிவேலு | 1000.00 |
| ஜெயரட்ணசிங்கம், இலந்தைக்காடு | 2000.00 | சிவரெத்தினம் வெதுப்பகம் V.V.T | 1000.00 |
| த. நந்தகேசன், வல்வெட்டி | 2000.00 | சீலைன்ஸ் கொம்பிளக்ஸ், உடுப். | 1000.00 |
| எமரால்ட் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி | 1500.00 | அ. சந்திரசேகரம் கம்பர்மலை | 1000.00 |
| மா. உதயகுமார், வல்வெட்டி | 1500.00 | துரை சவுண்ட், கொம்மந்தறை | 1000.00 |
| Dr. P. சிவபாலன், கொழும்பு | 1000.00 | கி.சிவசோதி, கருணாநிதி ச.ச.நி | 500.00 |
| சு. சற்குணராஜா, அல்வாய் | 1000.00 | பிரணகா நகைத்தொழிலகம்,யாழ். | 500.00 |
| க. சிவக்கொழுந்து, உடுப்பிட்டி | 1000.00 | கிரிஜாஸ்ரோர்ஸ், வல்வெட்டித்துறை | 500.00 |
| சீ. லம்போதரன், (கிராமஅலுவலர்) | 1000.00 | காந்தன் ப.பொ.வா. உடுப்பிட்டி | 500.00 |
| திசா களஞ்சியம், நெல்லியடி | 1000.00 | மு. தயானந்தன், வல்வெட்டித்துறை | 500.00 |
| | | | 176000.00 |

## அடியார்களுடன் ஒருவராக சந்நிதி முருகன்!

சந்நிதி முருகன் மருதர் கதிர்காமருக்கு வாக்களித்தபடி கொடியேற்றத் திருவிழாவின் பொழுதும், மற்றும் 11ம் திருவிழா தொடக்கம் பூக்காரர் திருவிழாவரை ஆலயத்திலும், ஆலயச்சூழலிலும் அடியவர்களுடன் ஒருவராக சந்நிதி முருகன் செயற்பெற்று, எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வான் என்ற நம்பிக்கை ஆலய பூசகர்கள் உட்பட அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, இந்த நம்பிக்கை நிஜமானது என்பதை அடியார்கள் பலர் உணர்ந்திருப்பதை நாம் இவ்விடத்தில் வெளிப்படுத்துகின்றோம். இதனால் போலும் இங்கே உற்சவத்தை நடத்துகின்ற பூசகர்கள் தொடக்கம், இங்கே ஒன்றுகூடுகின்ற அடியவர்கள் வரை அனைவரும் மிகுந்த பயபக்தியுடனும், அடக்கத்துடனும் தத்தம் காரியங்களை தாமே செவ்வனே நிறைவேற்றுகின்ற ஒரு சிறப்பையும் நாம் காணமுடிகிறது. உலகியல் வாழ்க்கையில் மக்கள் எதிர்நோக்குகின்ற துன்பங்கள், வேதனைகளைப் போக்குகின்றவராக சந்நிதியான் இருப்பதனால்த்தான் சாதரண நாட்களில்கூட இங்கே அடியார்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. ஞானத்தை வேண்டி ஞானிகளும் யோகிகளும் வாசம்செய்து வணங்குகின்ற சந்நிதியானை நாமும் தரிசித்து ஈடேற்றம் பெறுவோமாக.

நன்றி: உதயன் (29-08-2011)

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காம லெனக்கு வரந் தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்காநதி பால க்ருபா கரனே.

அற்புதங்கள் நிகழ்த்தும் சந்நிதி
முருகனை என்றும் தாள் பணிகின்றோம்


# சந்நிதியான் புடவையகம்



சகலவிதமான புடவை வகைகளையும்
விற்பனை செய்பவர்கள்

இல. 2, நவீன சந்தை வல்வெட்டித்துறை.
TP: 077-7965442

# துளசிதரன் நகைத் தொழிலகம்





ரமேஸ்கண்ணா (பத்தர்)
(உரிமையாளர்)
TP: 077-0886307

சகல விதமான நகைகளும் 22 கரட்டில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.

நிலையான முகவரி:
நெடியகாடு, வல்வெட்டித்துறை.